விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 09 திங்கட்கிழமை (24.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 187



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

யாழ்.மாநகர சபையின்

## புதிய உறுப்பினராக இருவர் பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை உறுப்பினர் பதவிக்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர் புதிதாக பதவியேற்கின்றனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார் ▶23

யாழுக்கு விஜயம் செய்த

## ஆறுமுகம் தொண்டமான் நேற்று விக்னேஸ்வரனுடன் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண் ▶23



## முடிவுக்கு வந்தது கல்முனை முஸ்லிம்களின் போராட்டம்

(அம்பாறை)

கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்த வேண்டாம் எனக்கோரி முஸ்லிம்களினால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் முடிவுக்கு வந்துள்ளது.

இனத்துவ ரீதியிலும் நிலத் தொடர்பற்ற ரீதியிலும் உருவாக்கப்பட எத்தனிக்கும் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தடை செய்யக்கோரி கல்முனை முஸ்லிம் மக்கள் போராட்டம் ▶23

பாராளுமன்ற தெரிவுக்குழுவில்

## சாட்சியம் வழங்கத் தயார்

ரணில் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் பாராளு ▶23

## தமிழர் உரிமையில் தலையிட வேண்டாம்

முஸ்லிம் தலைமைகளுக்கு சுமந்திரன் எச்சரிக்கை

(அம்பாறை)

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக விவகாரத்தில் தமிழர்களின் உரிமைகளை தட்டிப் பறிக்க முஸ்லிம்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

இந்த விடயத்தில் அநா ▶23

## வவு.செட்டிகுளத்தில் குடும்பப் பெண் கொலை

சந்தேகத்தில் கணவர் கைது

(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் மனைவியை வெங்காய வெடியை வெடிக்க வைத்து கொலை செய்த நிலையில் தலைமறைவாக இருந்த கணவன் நேற்று செட்டிகுளம் பொலிஸா ▶23

-உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்-

# தெரிவுக்குழு அழைத்தாலும் சாட்சியம் வழங்க மாட்டேன்

## ஜனாதிபதி மைத்திரி உடும்புப்பிடி



**(கொழும்பு)**


**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் தாம் சாட்சியம் வழங்குவதற்கு ஒருபோதும் முன்னிலையாக மாட்டேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாக அறிய முடிகிறது.**

ஜனாதிபதியின் எதிர்ப்பையும் மீறி செயற்பட்டுவரும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் 7ஆவது அமர்வு நாளை 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு தரப்பிலுள்ள பலரும் சாட்சியம் வழங்கியுள்ள நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இன்னும் சாட்சியம் வழங்கவில்லை என்பதுடன் ▶23

## ரணில், மைத்திரி அரசாங்கத்தினால் தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்காது

சித்தார்த்தன் எம்.பி சுட்டிக்காட்டு



(வவுனியா)

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வருவதற்கும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வருவதற்கும் ஒரு நியாயமான தீர்வு எமக்கு கிடைக்கும் என்ற அடிப்படையில் தமிழ் மக்களும் இரு பெரும் கட்சிகளும் அமைத்த அரசாங்கம் தீர்வை தரும் என்ற அடிப்படையிலே அதற்கான செயற்பாடுகளை எடுத்துக்கொண்டு இருந்தோம்.

ஆனால் தற்போதைய நிலைப்பாட்டில் அவை நடப்பதற்கான வாய்ப்புக்கள் நிச்சயமாக இல்லை என தமிழீழ விடுதலைக்கழகத்தின் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற ▶23

## சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

இரா.சம்பந்தன் வேண்டுகோள்

(திருகோணமலை)

இந்த நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை மக்கள் நிரந்தரமாக நிம்மதியாக வாழ்வதாக இருந்தால் அவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் அரசரெத்தினம் அச்சுதன் தலைமையில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. ▶23

## திடீரென மயக்கமடைந்த 3 வயது பாலகி உயிரிழப்பு

கிளிநொச்சி பகுதியில் சம்பவம்

(கிளிநொச்சி)

திடீரென மயக்கமடைந்த மூன்று வயது சிறுமி ஒருவர் இரு நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

கிளிநொச்சி கோணாவில் யூனியன் குளம் பகுதியை சேர்ந்த பாஸ்கரன் சஸ்மிதா (வயது 3) என்ற சிறுமியே மேற்படி உயிரிழந்தவராவார்

குறித்த சிறுமி கடந்த 20ஆம் திகதி மயக்கமடைந்துள்ளார் உடனடியாக அக்கராயன் வைத்தியசாலைக்கு ▶23

## 60 லீற்றர் கசிப்பு தருமபுரத்தில் மீட்பு

சந்தேகத்தில் ஒருவர் கைது

(தருமபுரம்)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியிலேயே மேற்படி கசிப்பு உற்பத்தி ▶23

## சு.கட்சியும் பெரமுனவும் இணைந்தே வேட்பாளரை நிறுத்தும் - மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் இணைந்து வெற்றி பெறும் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து மாநாயக்க தேரர்களை நேற்று முற்பகல் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார். ▶23

# முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் பணத்திற்காக பதவியேற்றுள்ளனர்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

மக்கள்நலனுக்காக அன்றி இன்று நாட்டில் பணத்திற்காக அரசியலில் ஈடுபடும் அரசியல்வாதிகளே அதிகமாக இருக்கின்றனர் எனத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி, முஸ்லிம் அமைச்சர் தாமாக பதவி விலகியமையும், மீண்டும் பதவி ஏற்றுக் கொண்டமையும் பணத்திற்காகவே என்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என்றும் குறிப்பிட்டார்.

பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்களில் இருவர் மீண்டும் பதவியேற்றுக் கொண்டமை குறித்து விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், போதைப் பொருள் வியாபாரம் செய்பவர்களோ, ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்களோ ஜே.வி.பியில் இல்லை.

அவை ஐக்கிய தேசிய கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும், பொதுஜன முன்னணியிற்கும் உரித்தானவை. இவ்வாறான குற்றச்சாட்டுக்களில் மாட்டுபவர்களும் கைது செய்யப்படுபவர்களும் இந்தக் கட்சியின் ஆதரவாளர்களே. ஆனால், அவர்கள் எமக்கு சேறு பூசுவதற்கு முயற்சிக்கின்றனர். இவ்வாறான தலைவர்களை தெரிவு செய்த மக்களும் இதற்கு பொறுப்பு கூற வேண்டும். நாட்டின் ஜனநாயகத்தை கட்சிகளுக்கு பகிர்ந்தளிப்பது தவறாகும். ஐ.தே.க, சு.க மற்றும் பொதுஜன முன்னணி என்று வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும் இவர்கள் அனைவரும் ஊழல் மோசடி செய்வதில் ஒரே அணியாகவே செயற்படுகின்றனர்.

இதன் மூலம் இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் நாட்டை வெளிநாடுகளுக்கு விற்பதே இவர்கள் அனைவரினதும் நோக்கமாகும்.

இவை மாத்திரமின்றி, இனவாத அரசியலிலும் ஈடுபடுகின்றனர். சிலர் பணத்திற்காக அரசியல் செய்கின்றனர். அமைச்சு பதவிகள் கூட பணத்திற்காகவே பகிர்ந்தளிக்கப்படு கின்றன. இன்று தானாக பதவி விலகுவதும், மீண்டும் பதவி ஏற்றுக் கொள்வதும் பணத்திற்காக என்பதே உண்மையாகும். இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என்றார். (3)

# ஜனாதிபதி வேட்பாளராக சஜித் களமிறங்குவார்



## தலதா அத்துக்கோரள தகவல்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் ஆசிர்வாதத்துடன் சஜித் பிரேமதாச ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக எமது கட்சியில் இருக்கும் சிறந்த ஆளுமைகொண்ட சஜித் பிரேமதாச தெரிவுசெய்யப்படுவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாகக் வேண்டும் என்று நாங்கள் இன்று நேற்று அல்ல, பல வருடங்களுக்கு முன்பிருந்தே அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

வறிய மக்களின் கவலையை உணர்ந்து, மக்களுக்கு சேவை செய்ய முடியுமான தலைவராகவே நாங்கள் அவரை பார்க்கின்றோம் என்றார்.

இரத்தினபுரி கஹவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (3)


# கண்ணீர் அஞ்சலி



யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆசிரியரான திருமதி விஜிதாஜெயநாயகி ரட்ணராஜ் அவர்களின் அன்புத் தந்தையான

அமரர்

**இறப்பியேல் செபமாலை**

அவர்கள் கடந்த 17.06.2019 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா ஆண்டவரின் திருப்பாதங்களில் அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.

(9357)

ஆசிரியர் நலன்புரிச்சங்கம் - யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**கதிரவேலு சந்திரலிங்கம்**

(ஓய்வு நிலை மேற்பார்வையாளர் அச்சுவேலி பனை தென்னை வள அ.கூ.சங்கம்)



பிறப்பு
18
07
1949

இறப்பு
08
07
2015

எங்களின் தெய்வமே
எங்கள் குடும்பத்தின் குல விளக்கே
ஆண்டு நான்கானாலும்
அழியவில்லை எம் சோகம்
ஆறவில்லை எம் துயர்!!
ஆறாத்துயரில் எமை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ

காலங்கள் எத்தனை கடந்தாலும்
நம் கண்முன்னே நிழலாடும்
உங்கள் நினைவுகள் ஒருபோதும்
எம்மை விட்டு அகலாது
எத்தனை வருடங்கள் ஆனாலும்
உங்கள் நினைவாய் வாழ்ந்திடுவோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பருத்தித்துறை வீதி, கடைப்பிராய். (9354) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சிவப்பிரகாசம் தேவேந்திரராஜா



மந்துவில் மேற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் தேவேந்திரராஜா நேற்று ஞாயிற்றுக்கிழமை (23.06.2019) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் சிவப்பிரகாசம் - செல்லம்மா அவர்களின் அன்பு மகனும், கனகசுந்தரம் - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், கங்காதேவியின் அன்புக் கணவரும், இந்திரகுமார், சந்திரவதனா, சங்கீதா (லண்டன்), சுரேஸ்குமார் (கட்டார்), ராஜஜீவன், கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹரிராம் (லண்டன்), வித்தியா, ராஜீவ்காந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ராகேஸ் (லண்டன்), றவீஸ் (லண்டன்), லக்சிகா, அர்பின், சுவின், கர்ஸ் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இலுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மந்துவில் மேற்கு, கொடிகாமம். (C-6761) தகவல் : குடும்பத்தினர்

# 18,19வது திருத்தங்களை ரத்துச் செய்தால் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்

## ஜனாதிபதி மைத்திரி நம்பிக்கை



**(கொழும்பு)**

**சிறந்ததொரு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரசியலமைப்பிலிருந்து 18 மற்றும் 19 ஆவது திருத்தங்களை இரத்துச் செய்ய வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தம் சர்வாதிகாரத்திற்கு வழிகோலியதாகவும் 19 ஆம் திருத்தத்தின் ஊடாக, நாடு ஸ்திரத்தன்மையை இழந்ததாகவும் சுட்டிக்காட்டிய அவர், இந்த இரண்டு திருத்தங்களையும் இரத்துச் செய்தால் மட்டுமே நாட்டைச் சிறந்ததாகக் கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவித்தார். (இ-7)

### வெறுப்புப் பேச்சுகளை தடுக்க புதிய நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சிறுபான்மையினரைக் குறிவைத்து, சமூக வலைத்தளங்கள் குறிப்பாக பேஸ்புக் ஊடாக முன்னெடுக்கப்படும் வெறுப்புப் பேச்சுக்களைத் தடுப்பதற்குரிய, புதிய நடவடிக்கையை பேஸ்புக் நிறுவனம் முன்னெடுத்தது.


இவ்வாறான வெறுப்புப் பேச்சுக்களை பேஸ்புக்கில் பதிவிடுவதைத் தடுக்கவும் இவ்வாறான தகவல்கள் பரிமாறப்படுவதைத் தடுப்பதற்குமான, புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதற்காக புதிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் பேஸ்புக் நிறுவனம் தெரிவித்தது. (இ-7)

# கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை உடன் தரமுயர்த்துமாறு கோரி யாழில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை உடனடியாக தரமுயர்த்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில், யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக பிற்பகல் 2 மணியளவில் இப்போராட்டம் இடம்பெற்றது.



இந்தப் போராட்டத்தில் இந்து மகா சபையினர் மற்றும் பொது மக்கள் பலர் கலந்துகொண்டு தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

இதன்போது, கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரிய பதாகைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்துமாறு கோரி மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக முற்போக்கு தமிழர்கள் அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கல்முனை பிரதேச செயலகத்துக்காக


# நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத்தயார்!

## வியாழேந்திரன் அறிவிப்பு

(கல்முனை)

கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத் தயாராகவுள்ளதாக எஸ். வியாழேந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதில் உள்ள பிரச்சினைகள் எனக்கூறப்படும் காரணங்களை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.



கல்முனையில் போராட்டத்தில் ஈடுபட்ட மதத்தலைவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், எஸ். வியாழேந்திரன் உள்ளிட்டோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்து கலந்துரையாடினர். இதன்போதே வியாழேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மட்டக்களப்பு மத்திய வலயம், வவுனியா தெற்கு பிரதேச செயலகம் ஆகியன புவியியல் தொடர்பில்லாமலேயே இயங்குகின்றன.

அதேபோல் எண்ணிக்கையில், ஓட்டமாவடி கோரளைப்பற்று மத்திய பகுதியில் 8 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு ஒரு பிரதேச செயலகமும் கோரளைப்பற்று மேற்கு பகுதியில் 8 கிராம உத்தியோகத்தகர் பிரிவுக்கு ஒரு பிரதேச செயலகமும் இருக்கின்றது.

ஆனால் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்துக்கு 29 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளபோதும் ஏன் அதனை தரமுயர்த்த முடியாது?

மேலும் கல்முனை வடக்கில் இனத்துவத்தில் 36 ஆயிரம் தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

இந்நிலையில், புவியியல் தொடர்பு, எண்ணிக்கையைக் காரணங்காட்டி கல்முனை பிரதேச சபையை தரமுயர்த்துவதில் பின்னிற்க இயலாது.

இந்தவேளையில், கல்முனை பிரதேசசபையை தரமுயர்த்துவதற்காக அங்கஜன் இராமநாதன் கூறியதைப் போல், நானும் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத் தயாராக உள்ளேன்" என்று வியாழேந்திரன் தெரிவித்தார். (இ-7)

# மத்ரஸா பாடசாலை தொடர்பில் ஆராய விசேட குழு வேண்டும்

## பந்துல வலியுறுத்து



(கொழும்பு)

மத்ரஸா பாடசாலைகளில் கற்பிக்கப்படும் கற்கை நெறிகள், மற்றும் அடிப்படைவாத மத போதனைகள் தொடர்பிலும் ஆராய விசேட குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன் மத்ரஸா பாடசாலைகளை முழுமையாக அரசுடைமையாக்குதல் அவசியம். இப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இலவச கல்வி கிடைக்கப் பெற வேண்டும். அடிப்படைவாத பாடசாலைகளை முழுமையாக இல்லாதொழித்தால் மாத்திரமே இளம் தலைமுறையினரைப் பாதுகாக்க முடியும். தற்போதைய அரசாங்கத்தில் இது முடியாவிடின் ஆட்சிச் பொறுப்பை ஏற்கவுள்ள எமது அரசாங்கத்தில் நிச்சயம் மத்ரஸா பாடசாலைகள் நிபந்தனையற்ற விதத்தில் முழுமையாக அரசுடைமையாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)




# துரத்துகிறது துரதிர்ஷ்டம்



ஆட்டமிழப்பு ஒன்றுக்காக முறையிடும் அமீர்

## பாகிஸ்தான் அசத்தல் வெற்றி

## தென்னாபிரிக்கா ஏமாற்றம்

உலக கிண்ண லீக் போட்டியில் அசத்திய பாகிஸ்தான் அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஐந்தாவது தோல்வியை பெற்ற தென்னாபிரிக்க அணி, அரையிறுதிக்கான வாய்ப்பை பரிதாபமாக இழந்தது.

இங்கிலாந்தில், 12வது ஐ.சி.சி., உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. லண்டனில் உள்ள லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் அகமட், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**ஹரிஸ் அசத்தல்**

பாகிஸ்தான் அணிக்கு இமாம் உல் ஹக் (44), பகார் ஜமான் (44) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. மொஹமட் ஹபீஸ் (20) நிலைக்கவில்லை. லுங்கிடி வீசிய 22வது ஓவரில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி விரட்டிய பாபர் ஆஸம், அரைசதமடித்தார். மறுமுனையில் அதிரடி காட்டிய ஹரிஸ் சொகைல், ரபாடா வீசிய 35வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் பறக்கவிட்டார். பெலுக்வாயோ 'வேகத்தில்' ஆஸம் (69) வெளியேறி னார்.

மோரிஸ் பந்தை பவுண டரிக்கு அனுப்பிய ஹரிஸ் சோகைல், 38 பந்துகளில் அரைசதத்தை பதிவு செய்தார். இமாத் வாசிம் (23) சோபிக்கவில்லை. லுங் கிடி வீசிய 50வது ஓவரில் வகாப் ரியாஸ் (4), ஹரிஸ் சோகைல் (89) ஆட்டமிழந் தனர்.

50 ஓவர்களில் பாகிஸ் தான் அணி , 7 விக்கெட்டுக் களை இழந்து 308 ஓட்டங் களைக் குவித்தது. அணித் தலைவர் சர்பராஸ் அகமட் (2), ஷதாப் கான் (1) ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் லுங்கிடி 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி னார்.

**டு பிளசி அரைசதம்**

சவாலான இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா (2) ஏமாற்றினார். பின் இணைந்த குயின்ரன் டி கொக்,' அணித் தலைவர் டு பிளசி ஜோடி நிதானமாக ஓட்டங்கள் சேர்த்தது. ஷதாப் கான், வகாப் ரியாஸ் பந்தில் தலா ஒரு சிக்சர் அடித்த குயின்ரன் (47) அரைச்சத வாய்ப்பை இழந்தார். மார்க்ரம் (7) நிலைக்கவில்லை. பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் டுபிளசி (63), அரைச்சதம் கடந்தார்.

அடுத்து வந்த வான் டெர் துசென் (36), டேவிட் மில்லர் (31) ஓரளவு ஆறுதல் தந்தனர். வகாப் ரியாஸ் பந்தில் கிறிஸ் மோரிஸ் (16), ரபாடா (3), லுங்கிடி (1) போல்டாகினர். தென்னாபிரிக்க அணி, 50 ஓவர்களில், 9 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. பெலுக்வாயோ (46), தாகிர் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தான் சார்பில் வகாப் ரியாஸ், ஷதாப் கான் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து தென்னாபிரிக்க அணியின் அரையிறுதி வாய்ப்பு முடிவுக்கு வந்தது. தவிர, 2003க்கு பின் உலகக் கிண்ணத் தொடரில் லீக் சுற்றோடு திரும்பியது.


அதிரடி முயற்சியில் தென்னாபிரிக்காவின் டி கொக்




# பிரேசில் பிரமாதம்

## காலிறுதிக்கு முன்னேற்றம்

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் காலிறுதிக்கு பிரேசில் அணி முன்னேறியது. லீக் போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கில் பெரு அணியை வென்றது.

பிரேசிலில், கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் 46வது சீசன் நடக்கிறது. இதன் 'ஏ' பிரிவு லீக் போட்டியில் பிரேசில், பெரு அணிகள் மோதின.

ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்தி கோல் மழை பொழிந்த பிரேசில் அணி, ஆட்ட நேர முடிவில் 5-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. பிரேசில் அணிக்கு காஸ்மிரோ (11வது நிமிடம்), பிர்மினோ (18வது), எவர்டன் (31வது), டேனி ஆல்வ்ஸ் (53வது), வில்லியன் (90வது) தலா ஒரு கோலடித்து கைகொடுத்தனர்.

**பிரேசில் 'ரொப்'**

லீக் சுற்றின் முடிவில் 3 போட்டியில், 2 வெற்றி, ஒரு 'சமன்' என, 7 புள்ளிகளுடன் 'ஏ' பிரிவில் முதலிடம் பிடித்த பிரேசில் அணி காலிறுதிக்குள் நுழைந்தது. ஒரு வெற்றி, 2 'சமன்' என, 5 புள்ளிகளுடன் 2வது இடம் பிடித்த வெனிசுலா அணியும் காலிறுதிக்கு தகுதி பெற்றது.


கோலடித்த மகிழ்வில் பிரேசிலின் வில்லியன்

**வெனிசுலா வெற்றி**

மற்றொரு 'ஏ' பிரிவு லீக் போட்டியில் வெனிசுலா அணி, 3-1 என்ற கோல் கணக்கில் பொலிவியாவை தோற்கடித்தது.

# கிளர்ந்தெழுந்த பிராத்வைட்

## இறுதியில் வீழ்ந்த மே.தீவுகள்


பிராத்வைட்

மே.தீவுகளுக்கு எதிரான உலக கிண்ண லீக் போட்டியில் நியூசிலாந்து அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

இங்கிலாந்து மண்ணில் உலக கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. மான்செஸ்டரில் நடந்த லீக் போட்டியில் நியூசிலாந்து, மே.தீவுகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மே.தீவுகள் அணியின் தலைவர் ஹோல்டர் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

நியூசிலாந்து அணி ஆரம்பத்திலேயே அதிர்ந்தது. காட்ரெல் வீசிய முதல் ஓவரின் முதல் பந்தில் கப்டில் ஆட்டமிழந்தார். இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள், ஐந்தாவது பந்தில் முன்ரோ டக் அவுட்டானார். முதல் ஓவரில் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டை இழந்து அணி தடுமாறியது.

அணித் தலைவர் வில்லியம்சன், ரொஸ் ரெய்லர் ஜோடி இணைந்தது. அனுபவ வீரர்களான இவர்கள், முதலில் விக்கெட் சரிவை தடுக்கும் பணியில் இறங்கினர். இதனால், இந்த ஜோடி அடுத்து சந்தித்த நான்கு ஓவரில் இரண்டு பவுண்டரிகள் மட்டுமே அடித்தது. முதல் 10 ஓவர்களில் 30 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது. தோமஸ் பந்தை வில்லியம்சன் பவுண்டரிக்கு விரட்டினார். தன் பங்கிற்கு, ஹோல்டர் பந்தை ரெய்லர் பவுண்டரிக்கு விளாசினார். இருவரின் நிலையான ஆட்டம், பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுத்தது. இருவரும் அரை சதம் கடந்தனர். மூன்றாவது விக்கெட்டுக்காக 160 ஓட்டங்களைச் சேர்த்தபோது, ரெய்லர் (69) ஆட்டமிழந்தார். வில்லியம்சன் ஒரு நாள் அரங்கில் 13வது சதம் விளாசினார். இவர் 148 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மற்றவர்கள் ஏமாற்ற, நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 291ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் மே.தீவுகள் சார்பில் அதிகபட்சமாக காட்ரெல் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**பிராத்வைட் சதம்**

மே.தீவுகள் அணிக்கு ஷாய் ஹோப், பூரன் தலா ஒரு ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஹெட்மயர், கெய்ல் அரை சதம் விளாசினர். பெர்குசன் 'வேகத்தில்' ஹெட்மயர் (54), அணித் தலைவர் ஹோல்டர் (0) சிக்கினர். கெய்ல் 87 ரன்கள் (8 பவுண்டரி, 6 சிக்சர்) எடுத்தார். லீவிஸ் டக் அவுட்டானார். பொறுப்புடன் விளையாடிய கார்லோஸ் பிராத்வைட் சதம் விளாசினார். இவர் போல்டின் அபார 'பிடியெடுப்பில்' 101 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, மே.தீவுகள் அணி 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 286 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 5 ஓட்டங்களால் வீழ்ந்தது.


**'கோல்டன் டக்'**

நியூசிலாந்தின் மார்டின் கப்டில், கொலின் முன்ரோ, தாங்கள் சந்தித்த முதல் பந்திலேயே ஒரு ஓட்டம் கூட எடுக்காமல் 'பெவிலியன்' திரும்பினர்.

இதன்மூலம் சர்வதேச ஒருநாள் போட்டி அரங்கில், ஆரம்ப வீரர்கள் இருவரும் 'கோல்டன் டக்' (சந்தித்த முதல் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தல்) ஆன சோகம் 3வது முறையாக அரங்கேறியது.

# ஈழத்தமிழர்களை குற்றப் பரம்பரையினர் போன்று இந்திய அரசு நடத்துவது மனிதவுரிமை மீறலாகும்

## வைகோ கடும் காட்டம்



(சென்னை)

ஈழத்தமிழர்களைக்குற்றப் பரம்பரையினரைப் போன்று இந்திய மத்திய அரசு நடத்துவது, மனித உரிமை மீறலாகுமென ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கடுமையாக கண்டித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே வைகோ மேற்கண்டவாறு கண்டித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈழத்தில் இடம்பெற்ற யுத்தத்தின்போது உயிரை பாதுகாத்து கொள்வதற்காக இந்தியாவிற்கு வந்து, அடைக்கலம் புகுந்த மக்களை பல வழிகளிலும் அரசு ஒடுக்கி வருகின்றது.

மேலும் தமிழ் நாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்கின்ற இளைஞர்களை விசாரணைக்கு பின்னர் விடுவிப்பது வழக்கம். ஆனால் ஈழத்தமிழ் இளைஞர்களை கண்டதும் அவர்களை தீவிரவாதிகளாக சித்திரித்து எந்தவொரு விசாரணையுமின்றி செங்கல் பட்டிலிலுள்ள சிறப்பு முகாமிற்குள் ஆண்டுக்கணக்கில் அடைத்து வைத்திருந்தனர்.

தற்போது அவர்களை திருச்சி மத்திய சிறைக்கு இடமாற்றி அங்கு அடைத்து வைத்துள்ளனர்.

இத்தகைய இளைஞர்கள் விடுதலை எப்போது என்று தெரியாமல் இளைமைக் காலம் முழுவதையும் சிறைக்குள்ளேயே கழிக்கின்றனர்.

இந்நிலையிலேயே கடந்த சில நாட்களாக பாஸ்கரன், ரமேஷ், செல்வம் ஆகிய மூன்று தமிழர்களும் சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

ஆனால், அவர்களின் நியாயமான கோரிக்கைகளை தமிழக அரசு ஏற்காமல் புறக்கணித்து வருகின்றது" என வைகோ கவலை வெளியிட்டார். (இ-7)

---

## "இந்த நாட்டிற்கே சாபக்கேடு"

# கோத்தபாயவே ஜனாதிபதி வேட்பாளர் ஓகஸ்ட் 11 உத்தியோகபூர்வ அறிவிப்பு

## உதய கம்மன்பில உறுதி



(கண்டி)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையே வேட்பாளராக களமிறக்குவோம் என மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மேலும் ஓகஸ்ட் 11 ஆம் திகதி இதனை உத்தியோகபூர்வமாக அறிவிப்போம் என்றும் இதில் எந்தவொரு சிக்கலும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அவசரகாலச் சட்டம் தளர்த்தப்படுமாக இருந்தால், நாட்டின் பாதுகாப்பு நிலைமை மேலும் பலவீனமடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றையடுத்து, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்கள் குறித்து இரண்டு மாதங்கள் கடந்தும் இவ்வாறான தாக்குதல்கள் இனியும் இடம்பெறாமல் இருக்க அரசாங்கத்தால் எந்தவொரு ஸ்திரமான நடவடிக்கையும் எடுக்க முடியாதமையையிட்டு நாம் கவலையடைகின்றோம்.

பயங்கரவாத அமைப்புக்களுக்கான தடை மற்றும் முகத்தை முழுமையாக மறைக்கும் ஆடைகளுக்கான தடை என்பன கூட, அவசரகாலச் சட்டத்தின் கீழ் தான் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை சீராகிவிட்டது எனக் குறிப்பிட்டு அவசரகாலச் சட்டம் தளர்த்தப்படுமாக இருந்தால், தற்போது பயங்கரவாத அமைப்பாக தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் அனைத்தும் சாதாரண அமைப்புக்களாகிவிடும்.

இதனால், கைது செய்யப்பட்டுள்ளவர்களையும் விடுதலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். அதேபோல், குறித்த ஆடைகளுக்கானத் தடையும் இல்லாது போய்விடும். இந்த விடயம் குறித்து இரண்டு அரசியல் தரப்பும் சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதுதான் எமது வேண்டுகோளாக இருக்கிறது.

அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டின் பாதுகாப்புக்காகவும் எதிர்க்கால சந்ததியினரின் நன்மைக்காகவும் ஒன்றிணைந்து முடிவுகளை எடுக்க வேண்டும்.

மத்ரஸா பாடசாலைகள் தொடர்பிலும் இன்று பல கேள்விகள் எழுந்துள்ளன. இவை தொடர்பாகவும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான நிலைமைகளால் நாடு இன்னும் அபாயமான பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறது என்றே தெரிகிறது.

அடிப்படைவாதிகளின் பணம், அவர்களின் வாக்குகளுக்கு அடிபணிந்துதான் இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றவாளி என நாம் பல்வேறு ஆதாரங்களை முன்வைத்துள்ளோம். ஆனால், அவரிடம் இரண்டு மாதங்கள் கடந்தும் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளவில்லை.

எனினும், இவர் மீண்டும் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டால், நாம் நிச்சயமாக அவருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோம். ஜனாதிபதி இந்த விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். உண்மையில், இந்த அரசாங்கம் தற்போது இந்த நாட்டுக்கே சாபமாகத்தான் இருந்து வருகிறது.

இதனால், நாம் நிச்சயமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவைத்தான் வேட்பாளராக களமிறக்குவோம்.

ஓகஸ்ட் 11 ஆம் திகதி இதனை உத்தியோகபூர்வமாக அறிவிப்போம். இதில் எந்தவொரு சிக்கலும் இல்லை என்பதையும் நாம் இங்கு கூறிக்கொள்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## இராசி பலன்

**மீனம்:** தொழிலில் சிறு மாற்றம் செய்யும் சூழ்நிலை ஏற்படலாம், தூர தேசத் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், சயன குறைவுகள் ஏற்படலாம்.

**மேடம்:** பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**இடபம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு, அந்நியர்களின் ஒத்துழைப்புண்டு,

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**கும்பம்:** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை கூடும்.

**கடகம்:** உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தினரிடையே சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**மகரம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்குமேன்மையுண்டு, காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம்.

**சிம்மம்:** சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் சிரித்து மகிழ்வீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | சுக் | சூரி, ராகு, புத |
| சந் | இராசி பலன் | | செவ் |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரம் | | |
| சனி, கேது | குரு | | |

24.06.2019
ஆனி 09, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி பின்னிரவு 12.52 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 2.05 மணிவரை
சுபநேரம் 11.55 - 1.25 மணிவரை
இராகுகாலம் 7.25 - 8.55 மணிவரை


வளவன்

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி:** தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உடல் நலனில் முன்னேற்றமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்ட இலத்திரனியல் நூலகம் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் திருமதி தே.நவரட்ணம் தலைமையில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கனடாவிலுள்ள பழைய மாணவர்களின் அனுசரணையில் இந்த இலத்திரனியல் நூலகம் அமைக்கப்பட்டது. (படங்கள்:-மகாலிங்கம்)

## மின் விளக்குகள் பொருத்தல்



(சாவகச்சேரி)

மறவன்புலவு, தனங்கிளப்பு, கைதடி ஆகிய பகுதிகளில் கடந்த 20 ஆம் திகதி வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டன சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கு இவ்வருட (2019) வரவு-செலவுத் திட்ட நிதியில் தலா 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது.

16 ஆம் வட்டார பகுதிகளில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி மல்லிகாவின் 2 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டின் கீழ் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

இதேவேளை கைதடி, நாவற்குழி தெற்கு, மறவன்புலவு ஆகிய பகுதிகளில் ஒரு தொகுதி மின் விளக்குகள் 26 ஆம் வட்டார உறுப்பினர்களான அ.நிமலரோகன், பா.மல்லிகா ஆகியோரின் நிதியொதுக்கீட்டில் ஒரு பகுதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

தனங்கிளப்பு, மறவன்புலவு கிழக்கு, மறவன்புலவு வடக்கு ஆகிய பகுதிகளில் அடுத்த கட்டமாக மின் விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-114)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட வரணி சிமிழ் கண்ணகை அம்மன் ஆலயப் பொதுக்கூட்டமும் ஆலய பரிபாலன சபைக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆலய முன்றலில் இடம்பெறும். (இ-7)

## மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பணிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் புதன்கிழமை வரை எண்ணெய்க்காப்பு இடம்பெறும். (இ-7)

## புலமைப் பரிசில்கள் வழங்கல்






யாழ்.மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 74 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் கடந்த 21 ஆம் திகதி வழங்கப்பட்டன.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் மாணவர்களுக்கான பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் காசோலை, பாடசாலை உபகரணங்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் சமூக பாதுகாப்புச் சபையின் வடமாகாண இணைப்பாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (இ-101)

## 5000 இளைஞர், யுவதிகளுக்கு இலவச தொழிற் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தைச் சேர்ந்த 5000 இளைஞர், யுவதிகளுக்கு அவர்கள் கொண்டுள்ள திறன்களின் அடிப்படையில் இலவசமாக NVQ தகைமை மட்டம் III அல்லது IV வழங்குவதற்கான விசேட செயற்றிட்டமொன்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் வழிப்படுத்தலில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூவாயிரம் (3000) இளைஞர், யுவதிகள் மற்றும் கிளிநொச்சி ஐநூறு (500), மன்னார் ஐநூறு (500), முல்லைத்தீவு ஐநூறு (500), வவுனியா ஐநூறு (500) என வடமாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

RPL முறையானது தொழிலில் ஈடுபடும் அனுபவம் பெற்ற அனைவருக்கும் திறனை அங்கீகரிக்கும் சான்றிதழாகும்.

இம்முறை மூலம் சான்றிதழ் பெறுவதற்கு வயதுக்கட்டுப்பாடு எதுவும் இல்லை என்பதுடன்




தொழில் அனுபவமே போதுமானதாகும்.

மேலும் தேர்ச்சியை நிரூபிப்பதற்குத் தேவையான ஆற்றல் மற்றும் சான்றுகள் மட்டுமே போதுமானதாகும்.

இதுதொடர்பான மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய NAITA மாவட்ட தலைமை அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள் யாழ்ப்பாணம் - 021 222 2383, வவுனியா - 024 222 4679, கிளிநொச்சி - 021 228 5615, மன்னார் - 023 222 3404, முல்லைத்தீவு - 021 206 1012 என ஆளுநர் அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-7)

## அலங்கார உற்சவ பூர்த்தி

இருபாலை கிழக்கு, அருள்மிகு, கந்தசாமி கோவில் (முனி கோவில்) ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதன் பூர்த்தி நிகழ்வு நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும். அன்றையதினம் பகல் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் அன்னதானத்துடன் நிறைவு பெற்று, இரவு 7 மணிக்கு திருக்கல்யாண நிகழ்வும் வீதியுலாவும் இடம்பெறும்.(இ





மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மாதிரிச் சந்தை கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் திருமதி.தயாசக்தி பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சிவலிங்கம் சிவதாசன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கொடிகாமம் செய்தியாளர்)

## நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று 24 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய நிபுணரும், மகாஜனாவின் ஆலோசகரும் வைத்தியகலாநிதியுமான த.பேரானந்தராஜா, சிறப்பு விருந்தினராக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட ஓய்வு நிலை முகாமையாளர் பூ.முருகையா மற்றும் கனடா பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்களான குரு.அரவிந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-105)

# தகுதியற்ற அரசியல் கலாசாரத்தால் வெறுப்புணர்வும் பிரிவுகளும் இலங்கையில் தீவிரம்!

## லண்டனில் சந்திரிகா குற்றச்சாட்டு

(லண்டன்)

**தகுதியற்ற அரசியல் கலாசாரம் காரணமாக இலங்கையில் வெறுப்புணர்வும் பிரிவுகளும் தீவிரமாகியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டினார்.**

மகாராணியின் விசேட விருது ஒன்றை பெறுவதற்காக லண்டன் சென்றிருந்த சந்திரிகா லண்டனில் இலங்கையர்களை சந்தித்தபோது மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

தனது தந்தை, கணவர் ஆகியோர் கொல்லப்பட்டமை மற்றும் தன் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் என்பவற்றின் மூலம் வன்முறையின் வலியை தான் உணர்ந்ததாக அவர் தெரிவித்தார்.



இந்நிலையில் நாட்டில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்துக்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (இ-7)

## பிரதமர் திருகோணமலைக்கு விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருகோணமலைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். எதிர்வரும் 27ஆம் திகதி இந்த விஜயத்தை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, அவர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை பொதுமக்களிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 26 ½ உயரம்: 5'3"
தகைமை/தொழில்: B.Com, BBA, HNDA, PGDE, DSM, MED, ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தொழில் (உள்நாடு)
தொ.இ: B/9832

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: 70 செவ் 1 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L, Canada எதிர்பார்ப்பு: படித்தபெண் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: B/9838

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 48 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L, London எதிர்பார்ப்பு: படித்த பெண் விவாகரத்தும் ஏற்கப்படும் (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: B/9843

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 11.5 உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L, பின்லாந்து
எதிர்பார்ப்பு: படித்த பெண் (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: B/9844

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L, முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார்தொழில், சொந்த வியாபாரம் (உள்நாடு, வெளிநாடு)
தொ.இ: G/9836

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 1சூரிசெவ் 5இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/9837

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 38 ½செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:B.Sc, MBA, Executive gineer
எதிர்பார்ப்பு: சைவபோசனம், Engineer, Accountant (உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/9839

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 08
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA, ஆசிரியை
எதிர்பார்ப்பு:அரசதொழில் (உள்நாடு)
தொ.இ: G/9840

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.





உ
சிவமயம்
அம்பாள் துணை
நயினாதீவு

ஆரம்பம்: 1973

## இந்து கலாசார அபிவிருத்திச் சபை

நாற்பத்து ஏழாவது வருட

## விசேட அறிவித்தல் - 2019

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் நிகழும் மங்கலகரமான விகாரி வருடம் ஆனித்திங்கள் 17 ஆம் நாள் (02.07.2019) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஆடித்திங்கள் 01 ஆம் நாள் (17.07.2019) புதன்கிழமை இரவு தெப்பத் திருவிழாவுடன் நிறைவு பெறுகின்றது. அம்பிகையின் திருவருளால் கடந்த வருடங்களைப் போல இவ் வருடமும் எமது சபையினால் ஆலய முன்றலில் (ஆலய முன் வாசல் கோபுரத்தின் வடக்குப் பக்கமாக) தாக சாந்தி மண்டபம் அமைத்து, கொடியேற்றம் தொடக்கம், தெப்பத் திருவிழா வரைக்கும் பகல் இரவாக குடிநீர்,குளிரேற்றப்பட்ட குளிர்பானம், கோப்பி, பால்கோப்பி ஆகியனவற்றை அடியார்களுக்கு வழங்குவதெனவும் தேர்த்திருவிழா அன்று (15.07.2019) திங்கட்கிழமை காலை அம்பாள் வீதியுலா வந்தடைந்த பின்னர் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட அருட்பிரசாதம் பிளாஸ்ரிக் கிண்ணத்தில் பொதி செய்யப்பட்டு அடியார்களுக்கு வழங்குவதெனவும் தீர்மானம் செய்து அதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைப் பணிவன்புடன் அறியத் தருகிறோம்.

அம்பிகை அடியார்களே, தர்மசீலர்களே, வர்த்தகப் பெருமக்களே, அரச பணியாளர்களே, வங்கிச் சேவையாளர்களே, கல்விச் சேவையாளர்களே மற்றும் தபால், மின்சாரம், சுகாதார சேவையாளர்களே, பிரதேச செயலகம், மாநகர சபைப் பணியாளர்களே, சகலருக்கும் எமது பணிவன்பான வேண்டுகோள்:
எமது சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள சகல பணிகளுக்கும் பெருநிதியும் பெருந்தொகை பொருட்களும் தேவைப்படுகின்றன. எனவே தாங்கள் தங்கள் நிறுவலங்கள், திணைக்களங்களில் வழமைபோல் நிதி சேகரித்து எமது பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குமாறு வேண்டி நிற்கின்றோம். சபையின் அறப்பணிகளுக்கு நிதி வசூல் செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள நிதி வசூல் அட்டையில் வசூல் செய்த நிதியைத் தாங்கள் விரும்பின் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தக வங்கியில் சபையின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் (NAINATIVU HINDU CULTURAL DEVELOPMENT SOCIETY) வைப்பில் இடலாம். (க/கு இல: A/C NO: 8060077643) நிதி கிடைத்ததும் அதற்கான பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபைக்கென, சபையின் ஸ்தாபகர் அமரர் R.R.பூபாலசிங்கம் அவர்களின் பெயரால் அவரின் குடும்பத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில், நயினை நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் யாத்திரிகர்களின் நலன்கருதி கலாசார மண்டபம் ஒன்று அமைப்பதற்கான ஒழுங்குகளைச் சபை மேற்கொண்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அந்தப் பாரிய பெரும்பணியை நிறைவு செய்வதற்கு தங்களின் பேராதரவினைபும் பங்களிப்பையும் பெரிதும் வேண்டி நிற்கின்றோம்.

### விசேட உற்சவங்கள்

02.07.2019 கொடியேற்றத் திருவிழா
11.07.2019 மஞ்சத் திருவிழா
14.07.2019 சப்பறத் திருவிழா
15.07.2019 தேர்த்திருவிழா
16.07.2019 தீர்த்தத் திருவிழா
17.07.2019 தெப்பத் திருவிழா

(C-6760)

நயினாதீவு
இந்து கலாசார அபிவிருத்திச் சபை.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே.

தலைவர்
ஆர்.பி.ஸ்ரீதரசிங்
உரிமையாளர், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்-கொழும்பு.

பொருளாளர்
பொ.வி.மகாலிங்கம்
முகாமையாளர், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

செயலாளர்
வே.ச.வி.சபாநாதன் JP
ஓய்வுநிலை குடியேற்றத் திட்ட அதிகாரி

# குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய


# குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்காவிடின்

# மக்களின் அதிருப்தியை அரசு எதிர்கொள்ளும்

## சர்ச்சைப் பேச்சு குறித்து அஸ்கிரிய பீட ஞானரத்ன தேரர் அறிக்கை

(கண்டி)

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால் அரசாங்கம் மக்களின் அதிருப்தியை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை என்று அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தெரிவித்தார்.**



தான் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்ததாக வெளியாகிய செய்திகளுக்கு மறுப்புத் தெரிவிப்பதற்காக அவர் விடுத்த விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அண்மையில் என்னால் சொல்லப்பட்ட போதனையை சிலர் தவறாகப் புரிந்து கொண்டு முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். நான் ஐக்கிய தேசிய கட்சி குறித்தும், முஸ்லிம் மக்கள் குறித்தும் கூறிய விடயங்கள் மக்கள் மத்தியில் அதிகம் பேசுபொருளாகியுள்ளன.

எனக்கு அரசாங்கத்தின் மீதோ, முஸ்லிம் மக்கள் மீதோ எந்தக் கோபமும் கிடையாது. நாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் நீண்டகாலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.

எதிர்காலத்திலும் இதே போன்று அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதற்கான உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

மதகுருமார்கள் என்ற ரீதியில் நாட்டையும் மக்களையும் ஆகமங்களையும் பாதுகாப்பதை மட்டுமே எம்மால் செய்ய முடியும். எம்மிடம் எவ்வித கட்சி பேதமோ அல்லது மத பேதமோ கிடையாது எனத் தெரிவித்தார். (இ-7)

# மகிந்த அரசிற்கு கடன் வழங்க எந்த நாடும் முன்வரவில்லை

## அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டு





(மத்துகமை)

வறிய மக்களுக்கு சிறப்பான சேவைகளைச் செய்த பிரபலமான அமைச்சர்கள் மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வரும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் 7 மருத்துவர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

மத்துகமை நேபொட பிரதேசத்தை சேர்ந்த 352 பேருக்கு சமுர்த்தி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போதைய அரசாங்கம் புதிதாக 6 இலட்சம் குடும்பங்களுக்கு சமுர்த்தி உறுதிப்பத்திரங்களை வழங்கி வருகிறது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு சமுர்த்தி வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. 1994 ஆம் ஆண்டு சமுர்த்தி உறுதிப் பத்திரங்களைப் பெற்ற சில குடும்பங்கள் தற்போது வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன.

வர்த்தகர்களுக்கு சமுர்த்தி வழங்கப்படுவதாக கிராமங்களில் குற்றச்சாட்டு எழுந்தது. இதனால், வறிய மக்களுக்கு சமுர்த்தியை வழங்க நாங்கள் தீர்மானித்தோம். தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின் சமுர்த்தி கொடுப்பனவு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டது.

நிதிப் பற்றாக்குறை நிலவியதன் காரணமாகவே கடந்த 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு நடத்தினார். மீண்டும் ஆட்சிக்கு வந்து நிவாரணங்களை இரத்துச் செய்ய அவர் தீர்மானித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையிலான அரசாங்கத்திற்கு கடன் வழங்க எந்த நாடும் முன்வரவில்லை. விமல் வீரவன்ச ஐக்கிய நாடுகள் அமைப்பின் அலுவலகத்திற்கு எதிரில் உண்ணாவிரதம் இருந்தார். எனினும் இலங்கை, ஐ.நாவின் உறுப்பு நாடு.

இதனால், ஐ.நா. எடுக்கும் தீர்மானங்களுக்கு இலங்கையும் ஆதரவளிக்க வேண்டும். தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வரும் போது, 9 ஆயிரத்து 400 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனாக செலுத்தப்பட வேண்டியிருந்தது.

மகிந்த அரசாங்க வணிக வட்டியிலேயே கடனை பெற்றுக்கொண்டது. ஆனால், எமது அரசாங்கம் 2 வீத வட்டியில் கடனைப் பெற்றுக் கொள்கிறது. நான் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்ய பெறும் சில கடன்களுக்கு வட்டி இல்லை. எனினும் மகிந்த ராஜபக்ஷ 7 வீத வட்டியில் கடனைப் பெற்றார்.

அத்துடன் மகிந்த அரசாங்கம் குழுக்களை உருவாக்கி இனவாதத்தை தூண்டி வந்தது. ஆனால், தாம் நடு நிலையானவர்கள் எனக் காட்டிக்கொண்டனர்.

பௌத்த மக்களின் 75 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெறலாம் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர். பௌத்த வாக்குகளால் மாத்திரம் வெற்றி பெற முடியாது.


சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திற்கு கடனை வழங்கியது. கடந்த அரசாங்கம் பெற்றுக் கொண்ட கடனில் இறுதி தவணையை ஜூலை மாதம் செலுத்த வேண்டும்.

ஆயிரத்து 500 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் தவணையாக செலுத்த வேண்டியிருந்தாலும் வறிய மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வேலைத் திட்டங்களை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறது எனவும் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாதுகாப்பை உறுதிப்படுத்த

# இந்திய உளவுத்துறையுடன் இணைந்து செயற்படுகிறோம்

## இராணுவத்தளபதி தெரிவிப்பு




(கொழும்பு)

பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்திய உளவுத்துறையுடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருப்பதாக இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்தார்.

மாதுறுஓய விசேட படைப் பயிற்சி பாடசாலையின் 49 ஆவது பிரிவின் விடுகை விழாவில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாதுறுஓய விசேட படைப் பயிற்சி பாடசாலையின் பாடநெறியின் முக்கியத்துவம் தொடர்பிலும் இராணுவத்தளபதி இதன் போது கருத்துத் தெரிவித்தார்.

குறுகிய காலப்பகுதிக்குள் இலங்கை இராணுவத்திற்கு அதி விசேடமான தைரியமுள்ள அதிகாரிகள் மற்றும் வீரர்கள் இந்த பாடசாலையால் உருவாக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

யுத்த காலப்பகுதியில் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தலைமைத்துவம் காரணமாக பல வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தேசிய அச்சுறுத்தலாக போதைப்பொருள்

## ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு



(திருகோணமலை)

தேசிய அச்சுறுத்தலாக காணப்படும் சட்டவிராத போதைப்பொருளை இல்லாதொழிப்பதற்காக முப்படையினர் மற்றும் பாதுகாப்புத் துறையினரால் ஆற்றப்படும் சிறப்பான சேவையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராட்டினார்.

திருகோணமலை கடல் மற்றும் சமுத்திர கல்வியியல் கல்லூரியில் பயற்சிபெற்ற அதிகாரிகளை அதிகார சபைக்கு நியமிக்கும் நிகழ்வு, முப்படையின் தளபதியான ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் திருகோணமலை கடல் மற்றும் சமுத்திர கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய பொருளாதார அபிவிருத்தி போன்றே ஒழுக்கமிக்க சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் ஆரோக்கியமான பிரஜைகளை உருவாக்குவதற்கும் முப்படையினர் வழங்கும் பங்களிப்பை ஜனாதிபதி பாராட்டினார்.

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் சமாதானம் மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இலங்கை கடற்படை மற்றும் முப்படையினர் ஆற்றிய ஈடு இணையற்ற சேவையை ஜனாதிபதி பாராட்டினார்.

இலங்கைக் கடற்படையின் வரலாற்றை அபிமானத்துடன் நினைவுகூர்ந்த ஜனாதிபதி கடற்படை சார்பில் அன்று முதல் இன்று வரையான காலப்பகுதியில் தாய் நாட்டிற்காக தமது உயிரைத் தியாகம் செய்த, அங்கவீனமுற்ற அனைத்து வீரர்களையும் நினைவுகூர்ந் தார்.

திருகோணமலை கடல் மற்றும் சமுத்திர கல்வியியல் கல்லூரியின் 32 (தொழில்நுட்ப), 33 (ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மாணவர்கள்) மற்றும் 59 ஆவது படையணியில் இணைத்துக் கொள்ளப்பட்ட 89 அதிகாரிகள் பயிற்சியை நிறைவு செய்ததன் பின் பதவிநிலை வழங்கப்பட்டது.

இலங்கைக் கடற்படையின் 04 ஆவது துரித தாக்குதல் படகுகளை உயர்வு நிலையில் அமர்த்தி ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்ட நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மேலும் தெரிவித்த ஜனாதிபதி, கடந்த சில வருடங்களாக பெற்ற கடின பயிற்சியினூடாக உள்வாங்கிக் கொண்ட உடல் மற்றும் மன உறுதியை தாய் நாட்டினதும் கடற்படையினதும் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தி பயிற்சியை நிறைவு செய்த அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்களென எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். தாய் நாட்டின் பாதுகாப்பிற்காக கடற்படைக்கு தமது பிள்ளைகளை அர்ப்பணித்த பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன், பயிற்சியை நிறைவு செய்த அதிகாரிகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் த சில்வா, கடற்படை பதவிநிலை தளபதி ரியர் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, கிழக்கு மாகாண கடற்பிரதேசங்களுக்குப் பொறுப்பான கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் மெரில் விக்கிரமசிங்க உள்ளிட்ட கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளும் பயிற்சிகளை நிறைவு செய்த அதிகாரிகளின் பெற்றோர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# வலி.வடக்கு காணி விடுவிப்பில் அதிகாரிகள் அசமந்தம்

## துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

வலிகாமம் வடக்கு தையிட்டி ஜே/250 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் வெளியேறிய போதும் காணியை விடுவிப்பதில் அதிகாரிகள் தாமதிப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளதுடன் அப்பகுதியில் உள்ள வீடுகளில் களவு அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாண வருகையின் போது விடுவிக்கப்படும் எனக் கூறப்பட்டது. எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் குறித்த வருகை இரத்துச் செய்யப்பட்டது.

எனினும் தற்போது நாடு வழமைக்கு திரும்பிய போதும் விடுவிக்க ஏற்பாடாகி இருந்த 25 ஏக்கர் நிலப்பரப்பு இதுவரை விடுவிக்கப்படவில்லை. கடந்த மாதம் யாழ்.இராணுவக் கட்டளைத்தளபதி நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது இந்த காணி இம்மாதம் விடுவிக்கப்படும் எக் கூறினார். ஆனால் இம்மாதம் முடிவடையும் நிலையில் இதுவரை காணி விடுவிக்கப்படவில்லை.

அந்தக் காணியில் இருந்த இராணுவத்தினர் வெளியேறியுள்ளதுடன் சிலர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இராணுவத்தினர் இல்லாத சமயம் பார்த்து திருடர்கள் சென்று தமது வீட்டுத் தளபாடங்கள், ஓடுகளை திருடிச் செல்வதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த காணியை விடுவிக்க அதிகாரிகள் அக்கறை செலுத்தவில்லை என காணி உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளதுடன் தொடர்ந்தும் ஏமாற்றாது மாத இறுதிக்குள் காணியை விடுவிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (9)


பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்

சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி

கண்டி. அம்பத்தன்ன -077 939 5222

Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


# குறை'களை' பதிகம் 48

## திருநெல்வேலி சந்தையின் அவலம்

யாழ். மண் பெருமை சேர்த்த
செம்மண் பூமியாம்- எங்கள்
திருநெல்வேலி மண்

இயற்கையோடு போராடி
விற்பனைக்குக் கொண்டுவரும்
விவசாயப் பெருந்தகைகள் எதிர்நோக்கும்
அவலநிலையை யாரறிவார்

நவீனம் என்று சொல்லி
நாசமாய்ப் போனதய்யா
திருநெல்வேலிச் சந்தை இன்று

தள்ளாத வயதினிலே முதியவர்கள்
வந்து பொருள் வாங்க முடியவில்லை
மேல்மாடி என்று சொல்லி
விவசாயப் பொருட்களை மேலே கொண்டு செல்ல
மூடை தூக்கும் தொழிலாளர்
படும்பாட்டை யாரறிவார்

இளம்பெடியள் கொஞ்சமேனும்
நாலு பணம் உழைக்கினம்
வயது வந்த மூடை தூக்கும் தொழிலாளர்
மேலே கொண்டு செல்ல முடியாமல்
தவிக்கின்ற நிலைமையை யாரறிவார்

மழைகாலம் வந்துவிட்டால்
வியாபார நடைபாதை முழுவதும்
மழைநீர் நிரம்பி நிற்க
சதுப்பு நிலம் போலாகிவிடும்
விவசாயப் பெருந்தகைகள்
நுகர்வோர் யாவருமே விழுந்தெழும்பும்
காட்சிகள் கண்முன்னே நடக்குதய்யா

அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும்
இருக்கும் துறைசார் அதிகாரிகளே
நவீன மாற்றத்தில் மழைகாலம் வரும் முன்னே
சில மாற்றம் செய்வீர் திருநெல்வேலிச் சந்தையின்
பெருமை பேச வைப்பீர்

வி.விஜிதரன்

அன்பு வாசகர்களே!

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# கடமைக்கு வராத சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் தன்னிலை விளக்கம் கோரல்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களில் கடந்த 20 ஆம் திகதி அன்று கடமைக்கு அறிக்கையிடாத சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அதற்கான தன்னிலை விளக்கத்தை அளிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் திருமதி. ஆரணி தவபாலனால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்களூடாக அவசரம் எனக் குறிப்பிட்டு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் விளக்கம் கோரல் எனத் தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ள கடிதத்தில் கடந்த 20.06.2019 அன்று கடமைக்கு அறிக்கையிடாத சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தன்னிலை விளக்கத்தினை வலய தலைமையக முகாமையாளருக்கு ஊடாக பெற்று தங்களுக்கு அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்துடன் இணைந்து இராஜாங்க அமைச்சர் விஜயகலா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அகியோர் சமுர்த்தி உத்தியோகத்தர்களை தரக் குறைவாக பேசியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-312)

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில்

# பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர் தொகை அதிகரிப்பு

## பெற்றோர், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனமெடுக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாடசாலைகளை விட்டு இடை விலகும் மாணவர்கள் தொகை அதிகரித்து வருவதாக பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பின்தங்கிய கிராமங்களில் அண்மைய நாட்களாக பாடசாலைகளை விட்டு இடைவிலகும் மாணவர்கள் தொகை மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட மாணவர்களின் தொகை என்பன சடுதியாக அதிகரித்து வருகின்றன என்றும் இது தொடர்பில் பெற்றோர்கள், சமூக நலன் விரும்பிகள், பொறுப்பான அதிகாரிகள் கூடிய கவனமெடுக்கவேண்டும் என பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில், விசுமவடு, உடையார்கட்டு உள்ளிட்ட பகுதிகளிலும் துணுக்காய் மாந்தை கிழக்குப்பகதிகளிலும் மாணவர்கள் பாடசாலைகளை விட்டு இடைவிலகுகின்ற அல்லது ஒழுங்கற்ற வரவுகளைக்கொண்ட தொகை அதிகளவில் காணப்படுகின்றன.


குறிப்பாக இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களில் வாழ்கின்ற குடும்பங்களின் பொருளாதார நெருக்கடி மற்றும் பாடாசலைகளுக்கான போக்குவரத்து வசதிகள் இன்மை இவ்வாறு இடைவிலகுவதற்கும் ஒழுங்கற்ற வரவுகளுக்கும் காரணமாக இருப்பதாக பல பாடசாலை அதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் இவ்வாறு இடைவிலகுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் ஒழுங்கற்று வருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இவ்வாண்டில் பாடசாலைக்ளுக்குச்செல்லாத மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக பாடசாலைகளிலும் சிறுவர் இல்லங்களிலும் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இருந்தபோதும் இவ்வாறு பின்தங்கிய பிரதேசங்களிலும் மேலும் இந்தத்தொகை அதிகரித்துக்காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (9-315)

# புளொட் அமைப்பின் பேராளர் மாநாடு





வவுனியாவில் தமிழீழ விடுதலை கழகத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் 9 ஆவது பேராளர் மாநாடு நேற்று வவுனியாவில் "புளொட்" அமைப்பின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தாத்தன் தலைமையில் நடைபெற்றது. வவுனியா கோவில்குளம் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள ஆதி திருமண மண்டபத்தில் நடைபெற்ற பேராளர் மாநாட்டில் வடக்கு,கிழக்கு பகுதியைச் சேர்ந்த மாவட்ட பொறுப்பாளர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். புலம் பெயர்ந்து செயற்பட்டு வந்த தமிழீழ விடுதலை கழகத்தின் உறுப்பினர்களும் இப்பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (9)





## முல்லை.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய 2019 ஆம் ஆண்டிற்கான முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி நடைபெறவிருந்த குறித்த கூட்டம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பிற்போடப்பட்டது. இந்த நிலையில் இன்று குறித்த கூட்டம் இடம் பெறவுள்ளது. (9)

# தீர்வுக்கான பொறுப்புக்கூறலை இந்தியா வழங்க வேண்டும்



## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி

இனப்பிரச்சினை தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்கு இருக்க வேண்டும் என்பதுடன் தீர்வுக்கான முழுமையான பொறுப்புக்கூறலை இந்தியா வழங்க வேண்டும் என குழுக்களின் பிரதித் தலைவரும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் ஊடகவியலாளர்களின் கேள் விக்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எங்களைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தச் சட்டம் ஒரு அடிப்படை அது தீர்வல்ல. தீர்வு என்பது சமஷ்டியாகத் தான் இருக்க வேண்டும். ஒரு சிலரின் செயற்பாடுகள் காரணமாக ஒட்டு மொத்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மீது பொய்யான செய்திகள், குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எவ்வளவோ விலைகளையும் உயிர்களையும் தீர்வுக்காக கொடுத்தவர்கள் நாங்கள். 13 ஆவது திருத்தச்சட்டத்தை இந்தியாவிடம் கோருவதோ அல்லது அதை பெறுவதற்கோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்போ அல்லது நாங்களோ செயற்படவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்திற்குள் முடங்குவதை நாங்கள் ஏற்கவில்லை. இனப் பிரச்சினை குறித்து பேசுவதற்கு 13 ஆவது திருத்தச்சட்டம் ஒரு அடிப்படை. அது ஒரு அத்திபாரம். தீர்வு என்பது அதற்கும் அப்பால் செல்ல வேண்டும்.

அத்துடன், அண்மையில் இலங்கை வந்த இந்திய பிரதமர் மோடியுடன் சந்திக்க எங்களுக்கு 10 நிமிடங்கள் தான் தரப்பட்டது. அதனை உண்மையில் பெருமையான விடயமாக நான் பார்க்கின்றேன். வடக்கு - கிழக்கு மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதில் இந்தியாவினுடைய பங்கு இருக்கின்றபடியால் தான் எங்களை அழைத்து சந்திக்கக் கூடிய வாய்ப்பு அமைந்திருந்தது. இந்தியா எங்களுடைய கரையோர நாடு. இன்று சீனாவின் ஆதிக்கம் இந்த நாட்டில் கூடுதலாகவுள்ளது. இந்தியாவினுடைய பாதுகாப்பு என்பது எங்களுடைய கரையோரப் பகுதிகளில் தங்கியுள்ளது. இந்தியாவின் பாதுகாப்புடன் பின்னிப் பிணைந்த பகுதியாக வடக்கு, கிழக்கு அமைந்திருக்கின்றது. இந்த நிலையில், எங்களுடைய இனப் பிரச்சினை தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்கு இருக்க வேண்டும். தீர்வுக்கான முழுமையான பொறுப்புக்கூறலை வழங்க வேண்டும் என்பது எனது கருத்து. பிரதமர் மோடி வெற்றி பெற்று குறுகிய நாட்களுக்குள் ஏற்படுத்திய அந்த சந்திப்பு மூலம் இந்தியாவுடனான உறவு பலப்படுத்தப்பட வேண்டும் என்ற செய்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, நாங்கள் தொடர்ச்சியாக இந்திய பிரதமரையும், தமிழ் நாட்டு தலைவர்களையும் சந்திப்போம். எங்கள் தொடர்பாக ஒரு எழுச்சியை தமிழ் நாடு கொண்டிருந்தால் தான் டில்லி அரசாங்கத்தையும் நல்ல வழிக்குக் கொண்டுவர முடியும். அந்தவகையில் நாம் தமிழ் நாட்டையும் பயன்படுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார். (9-250)

# சட்டவிரோத மண் அகழ்வு

## 6 கனரக வாகனங்கள் பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி, முகமாலை, தர்மக்கேணி, எழுதுமட்டுவாழ் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்ந்து அவற்றை ஏற்றிவந்த 6 கனரக வாகனங்களைப் பளை பொலிஸார் நேற்று மடக்கிப்பிடித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், மண்ணை ஏற்றிவந்த 6 கனரக வாகனங்களும் பொலிஸாரால் சோதனை செய்யப்பட்டு வாகனங்களின் சாரதிகளும் பொலிஸாரல் கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் சாரதிகள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-312)




முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவருமான பிரபா கணேசனின் மக்கள் சந்திப்பும், 300 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக்கழகத்தில் இடம்பெற்றது. ஜனநாயக மக்கள் காங்கிரஸின் வவுனியா மாவட்ட செயலாளர் நாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக வவுனியாவில் விழிப்புணர்வு கருத்தரங்கு

(வவுனியா)

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்கும் கருத்தரங்கு வவுனியா தனியார் விடுதியொன்றில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இவர்களுக்கு இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விரிவான விளக்கங்களும் விழிப்புணர்வும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் கபே அமைப்பின் தேசிய அமைப்பாளர் அகமட் மனாஸ் இலஞ்ச ஊழலை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவின் அதிகாரி சுமேந்தர கபே அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் ஆர்.மனோராஜ், உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெனீந்றன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (9)

# புதுக்குடியிருப்பு கரியல் வயல்வெளியில்
# தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு
## விவசாய நிலத்தை காப்பாற்றுமாறு விவசாயின் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட சுதந்திரபுரம் பகுதியிலுள்ள கரியல் வயல்வெளியில் விவசாயிகளின் வயல் நிலத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கை இடம்பெற்று வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் குறித்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில், இந்த வயல் பகுதி கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டது.

அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், மாத்தளன் போன்ற பிரதேசங்களில் இருந்த கரையோர மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு நீர்ப்பாசனக் காணிகள் இல்லை என்ற காரணத்தால் 1967 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட கரியல் வயல்வெளியில் மூங்கிலாற்கு தண்ணீரை மறித்து விவசாயம் செய்வதற்காக தலா மூன்று ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

1986 ஆம் ஆண்டு வரை இந்த பகுதியில் விவசாயம் செய்து வந்துள்ளார்கள். அப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக குறித்த பகுதிக்குள் செல்ல முடியவில்லை. இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு போரின் பின்னர் 2012 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பில் மீள் குடியேற்றப்பட்டுள்ளளோம். அது வரை எங்கள் நிலங்களை சென்று பார்வையிட முடியவில்லை.

ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் காணிகள் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அதில் விவசாயம் செய்து வந்துள்ளோம். இந்நிலையில் கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட மழைவெள்ளத்தினால் அதிகளவான மணல்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு எங்கள் வயல் நிலங்களில் காணப்படுகின்றன. கடந்த ஆண்டும் அதிகளவான வயல் நிலங்களை தோண்டி மணல் ஏற்றியுள்ளார்கள். இவ் விடயம் தொடர்பாக பல தரப்பிற்கு முறையிட்டும் எதுவித பயனும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் தற்போது அண்மையில் மண்கொள்ளையர்கள் எங்கள் வயல் நிலங்களை தோண்டி மண் ஏற்றும் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளார்கள்.

இந்த செயற்பாட்டினை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குறித்த வயல் நிலங்களின் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (9-281)

## உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கான செயலமர்வு

நிலை மாறுகால நீதிப் பொறிமுறை குறித்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 12 மணிவரையும் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அனுசரணையிலும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டிலும் வவுனியா நகரசபை, தமிழ் தெற்கு பிரதேச சபை, வடக்கு உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கான செயலமர்வில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் நீதித்துறையின் செயற்பாடுகள் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் அலுவலகம் குறித்தும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு தமிழ் மற்றும் சிங்கள மொழி பெயர்ப்புடன் விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக கலந்து கொண்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (9)

## முல்லை.கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு பகுதிகளில்
# போக்குவரத்து வசதிகள் இல்லை
### மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக பெற்றோர் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு.கேப்பாபிலவு, பிலக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் போதிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்றக்கிராமமான பிலக்குடியிருப்பு, பிரம்படி, கேப்பாபிலவு ஆகிய பகுதிகளுக்கான உரிய போக்குவரத்து வசதிகள் இன்மையால் மேற்படி கிராமங்களில் இருந்து பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது, பிலக்குடியிருப்பு, பிரம்படி ஆகிய கிராமங்களில் பாடசாலை மற்றும் முன்பள்ளி வசதிகள் இன்மையால் இப்பிரதேசத்தைச்சேர்ந்த மாணவர்களும் சிறார்களும் தமது கல்வி செயற்பாடுகளுக்காக கேப்பாபிலவு மாதிரிக்கிராமம் அல்லது வற்றாப்பளைக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறித்த கிராமங்களில் உள்ள தரம் 1 முதல் தரம் 5 வரையான மாணவர்கள் கேப்பாபிலவு மாதிரிக்கிராமத்திலுள்ள பாடசாலைக்கும் தரம் 6 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வற்றாப்பளை மகா வித்தியாலயத்திற்கும் சென்று வருகின்றனர்.

இந்நிலையில் காலையில் மாணவர்கள் பாடசாலை செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் இல்லாததனால் மேற்படி மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

இதேபோன்று பாடசாலை சென்று திரும்புவதற்கும் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது என்றும் இவ்வாறு போக்குவரத்து வசதிகள் இன்மையால் பிலக்குடியிருப்பு, பிரம்படி, கேப்பாபிலவு பகுதிகளை சேர்ந்த மாணவர்களின் வரவுகள் மிகக்குறைவாகவே காணப்படுவதாக பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளதுடன், தமது பிள்ளைகள் கல்வியைத்தொடரக்கூடிய வகையில் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதியினை ஏற்படுத்தித் தருமாறு பிரதேச மக்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)




## பத்திரிகையியல் பயிற்சிப்பட்டறை



முல்லைத்தீவு மாவட்டத்தில் இளம் ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்குடன் ஐ.எல்.ஓ. நிறுவனத்தினுடைய அனுசரணையில் முல்லைத்தீவு மாவட்ட பெண் முயற்சியாளர் கூட்டுறவு சங்க ஏற்பாட்டில் "வடமாகாண பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதன் ஊடாக சமாதானத்தை கட்டியெழுப்புதல்" என்கின்ற செயற்றிட்டத்தினூடாக 30 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பத்திரிகையியல் தொடர்பான பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஜீனு சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்தில் இடம்பெறும்.

குறித்த பயிற்சி வகுப்பானது கடந்த 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் 15,16 ஆம் திகதிகளிலும் 23, 24, 25 ஆம் திகதிகளிலும் 29, 30 ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளது.

விசேட பயிற்சிப் பட்டறை வளவாளர்களாக அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார், ஊடகவியலாளர் ஜெயம் ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டு நடத்தி வருகின்றனர். (9-281)

# கிளிநொச்சியில் பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுப்பு

கிளிநொச்சியில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

அந்த வகையில், தட்டுவன்கொட்டியில் 15 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்படவுள்ள வீதிக்கான பணிகளையும் பொன்னகரில் அமைக்கப்படவுள்ள வீதிக்கான பணிகளையும் கிளிநொச்சி கிருஷ்ணன் ஆலயத்தில் 7.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள தேர் இருப்பிடத்திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்ததுடன் புதுமுறிப்பு வீதி, கௌதாரிமுனை வீதி மற்றும் 10 பாலங்களுக்கான ஆரம்பப்பணிகளையும் ஆரம்பித்து வைத்தார்.

குறித்த வீதி பாலங்களுக்கான ஆரம்பப்பணிகளின் போது நாடாளுமன்ற உறுப்பினருடன் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் நிறைவேற்றுப்பொறியியலாளர், அந்த வட்டாரங்களின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (9)

# தேசிய இளைஞர் விருது போட்டி





(பனிக்கன்குளம்)


தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 41 ஆவது தேசிய இளைஞர் விருதுப் போட்டிகள் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி மா.சசிகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி.சரோஜா குகனேசதாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பேச்சு, நடனம், பாடல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் போட்டிகள் இடம்பெற்றதுடன் இதில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். (9-281)

# பாரதம்

## பீகாரில் வாட்டும் மூளைக்காய்ச்சல் உயிரிழப்பு 130 ஆக அதிகரிப்பு!



(பாட்னா)
பீகார் மாநிலத்தின் முசாபர்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் மூளைக் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 129 ஆக அதிகரித்துள்ளது.

பீகார் மாநிலத்தில் குழந்தைகளைத் தாக்கும் மூளைக் காய்ச்சல் நோய் பரவி வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து அங்கு நோய் பரவியது.

இதில் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் வரை 11 பேர் உயிரிழந்திருந்தனர். ஆனால் இப்போது திடீரென இதன் தாக்கம் மேலும் அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக உயிரிழப்பு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், பீகாரில் மூளைக் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 130 ஆக அதிகரித்துள்ளது. மேலும், காய்ச்சல் பாதிப்பு அறிகுறியுடன் இருக்கும் பல குழந்தைகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

## நியூசிலாந்துக்குச்செல்ல முயன்று 243 பேருடன் மாயமான இந்தியப்படகு

### அரசை அணுகியுள்ள உறவுகள்



(கேரளா)
கடந்த ஜனவரி மாதம் கேரளாவிலிருந்து நியூசிலாந்து செல்ல முயன்று 243 பேருடன் காணாமல் போன இந்தியப் படகை கண்டறிய அவ்வழியே உள்ள சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகாரத் துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 12 ஆம் திகதி அன்று தேவமாதா என்ற படகு மூலம் கேரளாவின் முனம்பம் பகுதியிலிருந்து நியூசிலாந்தை நோக்கி 200க்கும் மேற்பட்டவர்கள் பயணத்தை தொடங்கியிருந்தனர். பயணத்தை தொடங்கி 5 மாதங்கள் கடந்துவிட்ட பின்னரும் அவர்களின் இருப்பு குறித்த எந்த தகவலும் வெளியாகவில்லை.

இது தொடர்பாக, கடந்த வியாழக்கிழமை ஊடகங்களுக்கு விளக்கமளித்துள்ள வெளிவிவகாரத்துறை பேச்சாளர் ரவீஷ் குமார்,

"பசுபிக் கடலை நோக்கி இப்படி ஒரு படகு சென்றிருப்பதை கேரள அரசாங்கம் தெரிவித்திருந்தது. குறித்த பகுதியிலுள்ள நாடுகளுக்கு தகவல் கொடுத்துள்ள போதிலும், எந்த நாட்டிடமிருந்தும் எந்த தகவலும் கிடைக்கவில்லை" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், காணாமல் போனவர்களின் உறவினர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில், 12 நாள் குழந்தை உட்பட 85 குழந்தைகள் அப்படகில் சென்றிருப்பது தெரிய வந்துள்ளது. இவர்களில் பெரும் பகுதியினர் தெற்கு டில்லியிலுள்ள மதாங்கீர் பகுதியில் வசிக்கும் தமிழர்கள் என தெரியவந்துள்ளது.

இவர்களின் நிலை குறித்து கண்டறிய படகில் சென்றவர்களின் விபரங்களை உள்துறை, வெளிவிவகாரத்துறை, டில்லி அரசாங்கம், தேசிய மனித உரிமை ஆணையகம் உள்ளிட்ட பல தரப்புக்கு காணாமல் போனவர்களின் உறவினர்கள் அனுப்பியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க 1000 நீதிமன்றங்கள் அமைக்கப்படும்

### பாக்.நீதிபதி தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. இது தொடர்பாக ஆண்டுதோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் பதியப்படுகின்றன. அசிட்வீச்சு, கடத்தல், பாலியல் துஷ்பிரயோகம், கௌரவ கொலை போன்ற குற்றங்கள் அதிகரித்து வருவதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரிக்க 1,000 நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என தலைமை நீதிபதி ஆசிப் சயீத் கோசா தெரிவித்துள்ளார்.

அதாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு நீதிமன்றம் இருக்கும்.

பிற நீதிமன்றங்களை விட இது மாறுபட்டதாகும். பெண்கள் இங்கு எந்தவித பயமுமின்றி புகார் அளிக்கலாம் என மேலும் தெரிவித்தார். (7)

## தொழிற்சாலையில் தெ
## 30 பேர் உடல் கரு


(ஜகார்த்தா)
இந்தோனேசியத் தொழிற்சாலையில் இடம்பெற்ற விபத்தில் 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேசியாவின் வடக்கு சுமாத்ரா பகுதியிலுள்ள பின்ஜாய் மாவட்டத்துக்குட்பட்ட சம்பிரேஜோ என்ற கிராமத்தில் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது.

இந்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் வழமை போன்று தயாரிப்புப் பணிகள் நடைபெற்றுவந்த நிலையில் திடீரென்ற
சம்பவம் ஓ
இந்த வி
பேர் உயி
ஊடகங்கள்
விபத்து

## ஆளில்லா விமானத்தை சுட்
## 150 பேரை கொல்வது பொருத்த

### ஈரான் மீதான தாக்குதலை இடைநி




அமெரிக்காவின் தாக்குதலால் 150 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்படலாம் என மதிப்பிடப்பட்டதாலேயே ஈரான் மீதான தாக்குதலை இறுதிநேரத்தில் நிறுத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் செய்தியில் ட்ரம்ப் இதனை தெரிவித்துள்ளார்.

நாங்கள்கடந்த வியாழக்கிழமை இரவு தாக்குதலை மேற்கொள்வதற்கான முழுமையான தயார் நிலையிலிருந்தோம்.

ஆனால் அமெரிக்காவின் தாக்குதலால் 150 பேர் வரை கொல்லப்படுவார்கள் என எனக்கு தெரிவிக்கப்பட்டதால் தாக்குதல் ஆரம்பிப்பதற்கு பத்து நிமிட

## 69 நாட்கள் சூரிய
## அதிசயத் தீவு நே





(ஒஸ்லோ)
ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நோர்வேயில் உள்ள சொம்மாரோயி என்ற தீவு காலம் மற்றும் நேர அடிப்படையில் உலகின் மற்ற பகுதியில் முற்றிலும் மாறுபட்டதாகும்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான நோர்வேயில் உள்ள சொம்மாரோயி என்ற தீவு காலம் மற்றும் நேர அடிப்படையில் உலகின் மற்ற பகுதியில் முற்றிலும் மாறுபட்டதாகும்.

ஆர்க்டிக் வட்டத்தின் வடக்கில் அமைந்துள்ள இந்தத் தீவில் நவம்பரில் இருந்து ஜனவரி வரை இருட்டாகவே இருக்கும். அதேபோல் ஆண்டில் சில மாதங்கள் இதற்கு நேர் எதிரானதாக இருக்கும். அதன்படி தற்போது அந்த தீவில் சூரியன் மறையாத
18 ஆம் தி
யாத கால
அடுத்த
திகதி வ
தான் இருக்
இதனா
வாழ்க்கை
தங்களது

# ் வெடிப்பு சம்பவம்!
# கருகி உயிரிழப்பு

திடீரென்று பயங்கரமான வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த விபத்தில் சிக்கி உடல் கருகி 30 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்து இடம்பெற்ற பகுதியில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் படுகாயமடைந்த வர்கள் சிகிச்சைகளுக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# ் சுட்டு வீழ்த்தியதற்காக
# ருத்தமான நடவடிக்கையல்ல

## டைநிறுத்திய ட்ரம்ப் விளக்கம்



த்திற்கு முன்னர் அதனை நிறுத்தினேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆளில்லாத விமானத்தை ஈரான் சுட்டு வீழ்த்தியதற்காக 150 பேரை கொல்வது பொருத்தமான நடவடிக்கையில்லை என கருதியதாலேயே தாக்குதலை நிறுத்துமாறு உத்தரவிட்டேன் எனவும் தாக்குதலை மேற்கொள்வதற்கு 30 நிமிடத்திற்கு முன்னர் படையதிகாரிகளுடன் நான் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டேன். இவ்வேளை இந்த தாக்குதல் காரணமாக எத்தனை பேர் கொல்லப்படுவார்கள் என்பது குறித்து மாத்திரமே நான் அறியவிரும்பினேன் எனவும் ட்ரம்ப் சிபிஎஸ் நியுசிற்கு தெரிவித்துள்ளார். (7)

# யின் மறையாத
# நோர்வேயில்



மறையாத காலம். அங்கு கடந்த மாதம் 18 ஆம் திகதி நள்ளிரவு சூரியன் மறையாத காலகட்டம் தொடங்கியது.

அடுத்த மாதம் (ஜூலை) 26 ஆம் திகதி வரை 69 நாட்களுக்கு இப்படித்தான் இருக்கும்.

இதனால் அங்கு வசிக்கும் மக்களின் வாழ்க்கை நிறையவே மாறியிருக்கிறது. தங்களது வழக்கமான நேரத்தைக் கடைப்பிடித்தல் முறைகளிலிருந்தும் விடுபடும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இதனால் அவர்கள் தங்களது தீவை உலகின் முதல் நேரமற்ற மண்டலமாக அறிவிக்குமாறு கோரிக்கை வைத்துள்ளனர். (7)

## நீடிக்கும் பதற்றநிலை

# எம் நாட்டின் மீது ஒரு குண்டு பாய்ந்தாலும் அமெரிக்காவின் உடைமைகள் தீக்கிரையாகும்

## ஈரான் மிரட்டல்

(தெஹ்ரான்)

மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு சொந்தமான உடைமைகள் தீக்கிரையாக்கப்படும் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்ட அமெரிக்கா, ஈரானுடன் கடும் மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறது. இதனால் ஈரானுக்கு எதிராக கடும் பொருளாதாரத் தடைகளையும் அமெரிக்கா விதித்துள்ளது.

ஈரானும் அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம் என்று பதிலடி கொடுத்து வருகிறது. அண்மையில் ஓமன் வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதலுக்கு ஈரானும் அமெரிக்காவும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தியிருந்தன. இதற்கிடையே ஈரானின் தெற்குப் பகுதியிலுள்ள ஹோர்மஸ்கான் என்ற பிராந்தியத்திற்குள் வந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரான் தெரிவித்தது.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த அமெரிக்கா, உளவு விமானம் சர்வதேச எல்லையில் தான் பறந்தது. அதை வேண்டுமேன்றே ஈரான் சுட்டு வீழ்த்தியதாக குற்றம் சுமத்தியது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈரானை எச்சரிக்கும் விதமாக தனது டுவிட்டரில் 'ஈரான் மிகப் பெரிய தவறு செய்து விட்டது' எனப் பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், எங்கள் நாட்டின் மீது ஒரு குண்டு பாய்ந்தாலும் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளுக்கு சொந்தமான உடைமைகள் தீக்கிரையாகும் என ஈரான் இராணுவத் தளபதியின் செய்தி தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் அபோல்பஸல் ஷேகர்ச்சி எச்சரித்துள்ளார். (7)

# பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு பாகிஸ்தானுக்கு சர்வதேச நிதி நிறுவனம் காலக்கெடு

(நியூயோர்க்)

ஐ.நா. பாதுகாப்புச் சபை உத்தரவின்படி பாகிஸ்தான் மண்ணில் செயற்படும் பயங்கரவாதிகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்குள் கட்டுப்படுத்த சர்வதேச நிதி நிறுவனம் காலக்கெடு விதித்துள்ளது.

சர்வதேச அமைப்பான நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (எப்.ஏ.டி.எப்.) கூட்டம் அமெரிக்காவில் ஓர்லாண்டோ மற்றும் புளோரிடாவில் கடந்த 16 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெற்றது.

அதில் சர்வதேச நாடுகளுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து விவாதிக்கப்பட்டது.

அப்போது பாகிஸ்தானுக்கு நிதியுதவி வழங்க இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன.

அண்மையில் ஹபீஸ் சயீத், மவுலானா மசூத் அசார் மற்றும் சிலரை ஐ.நா. பாதுகாப்புச் சபை சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்து அறிவித்தது.

அதன்படி அவர்கள் மீது பாகிஸ்தான் அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி உதவி செய்வதை நிறுத்த வேண்டும். அவர்களின் பயங்கரவாத செயல்களை தடுத்து நிறுத்த வேண்டும். ஆனால் ஹபீஸ் சயீத், மவுலானா மசூத் அசார் மீது உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

தொடர்ந்து நிதியுதவி செய்யப்படுகின்றன எனக் குற்றம் சாட்டப்பட்டது.

அதற்கு பாகிஸ்தான் மறுப்பு தெரிவித்தது. லஷ்கர்-இ-தொய்பா, ஜமாத்-உத்-தவா, பலா-இ- இன்சானியத் அறக்கட்டளை மற்றும் ஜெய்ஷ்-இ-முகமது பயங்கரவாத அமைப்புகளுக்கு சொந்தமான 700 சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன என வாதிட்டது.

அதில் தாங்களுக்கு உடன்பாடு இல்லை என நிதி நடவடிக்கை பணிக்குழுவில் அங்கம் வகிக்கும் இந்தியா உள்ளிட்ட பல உறுப்பு நாடுகள் தெரிவித்தன.

அதைத் தொடர்ந்து பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் மீது இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என பாகிஸ்தானிடம் கேள்வி எழுப்பியது.

அதற்கு பாகிஸ்தான் அதிகாரிகளால் பதில் அளிக்க முடியவில்லை.

ஏனெனில் பயங்கரவாதிகளின் முகாம்கள், ஆயுதக் கிடங்குகள், வெடி பொருட்கள் மற்றும் சொத்துக்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே அவற்றின் மீதான நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கையை பாகிஸ்தான் வழங்க வேண்டும் என நிதி நடவடிக்கை பணிக்குழு கெடு விதித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் உத்தரவின்படி பாகிஸ்தான் மண்ணில் செயற்படும் பயங்கரவாதிகளை எதிர்வரும் ஒக்டோபருக்குள் கட்டுப்படுத்த வேண்டும்.

இல்லாவிடில் பாகிஸ்தான் தொடர்ந்து கறுப்புப்பட்டியலில் இடம் பெறும்.

அதனால் சர்வதேச நிதி ஆணையம், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களிடம் இருந்து பாகிஸ்தானால் கடன் உதவி பெற முடியாது என எச்சரிக்கை விடுத்தது.

நிதி நடவடிக்கை பணிக்குழு பாகிஸ்தானை ஏற்கனவே கறுப்புப் பட்டியலில் வைத்துள்ளது.

இந்த நிலை தொடர்ந்து நீடித்தால் பாகிஸ்தானுக்கு மேலும் நிதிச் சுமை ஏற்படும். அந்நாட்டின் பொருளாதார நிலை பாதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# பெண் மீது தாக்குதல் நடத்திய பிரிட்டன் அமைச்சர் பதவி நீக்கம்

(லண்டன்)

பருவநிலை மாற்றத்துக்கு எதிரான விழிப்புணர்வு பிரசார இயக்கத்தை சேர்ந்த பெண்ணைத் தாக்கி, விருந்து நிகழ்ச்சியில் இருந்து வெளியேற்றிய பிரிட்டன் அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பிரிட்டன் நாட்டில் பருவநிலை மாற்றத்துக்கு எதிராக சில பசுமை காவலர்கள் விழிப்புணர்வு பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையில், லண்டன் நகரில் உள்ள மேன்ஷன் ஹவுஸ் விடுதியில் நடைபெற்ற ஒரு விருந்து நிகழ்ச்சியில் பசுமை காவலர்கள் இயக்கத்தை சேர்ந்த ஒரு பெண் பிலிப் ஹாம்மன்ட் பேசிக் கொண்டிருந்த மேடையின் அருகே செல்ல முயன்றதாக கூறப்படுகிறது.

இதைக் கவனித்த வெளியுறவுத்துறை இணை அமைச்சர் மார்க் பீல்ட், உடனடியாக அந்தப் பெண்ணின் மீது பாய்ந்து தாக்கினார்.

பொறுப்புள்ள ஒரு அமைச்சரின் நாகரிகமற்ற இந்த செயலுக்கு லண்டன் நகர மேயர் சாதிக் கான் உள்ளிட்ட பலர் கண்டனம் தெரிவித்திருந்தனர்.


இதையடுத்து, மார்க் பீல்ட் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக பிரிட்டன் பிரதமர் தெரசா மே அலுவலகம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. (7)

# தங்கம் கடத்திய குற்றச்சாட்டில் 6 இந்தியப் பிரஜைகள் கைது

(கொழும்பு)

தங்கம் கடத்திய குற்றச் சாட்டில் இந்தியப் பிரஜைகள் 6 பேர் இலங்கை சுங்க அதிகாரி களினால் கைதுசெய்யப்பட்டு ள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சென்னையிலிருந்து 6E 1204 எனும் விமானத்தில் இலங்கை வந்த பயணிகளே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு ள்ளனர்.



இவர்களிடமிருந்து ரூபா 10 இலட்சம் (ரூ.1,015,920) பெறு மதியான 169.32 கிராம் நிறை கொண்ட 13 தங்கக் கட்டிகள் மற்றும் 388.8 கிராம் நிறை கொண்ட பூரணமாக்கப்படாத 06 தங்கக் கட்டிகள் உள்ளிட்ட ரூ. 3 மில்லியன் பெறுமதியான தங்கம் மீட்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் பதில் பணி ப்பாளர் நாயகமுமான சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை சுங்கத் திணைக்களத்தினர் மேற் கொண்டு வருகின்றனர். (இ-7)

# உபசம்பதா நிகழ்வில் ஜனாதிபதி





(கொழும்பு)

இலங்கை அமரபுர மகா நிக்காயவின் அமரபுர அரிய வங்ச சத்தம்மயுக்திக்க பிரிவின் 42 ஆவது உபசம்பதா நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் பிற்பகல் கல்லேல்ல புலத்திசி கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது.

இலங்கை அமரபுர மகா நிக்காயவின் அமரபுர அரிய வங்ச சத்தம்மயுக்திக்க பிரிவின் உபசம்பதா நிகழ்வில் 100 பிக்குகள் "உபசம்பதா" சமயப் பணியில் ஈடுபட்டனர்.

இலங்கை அமரபுர மகா நிக்காயவின் மகாநாயக்க தேரர் ஸ்ரீகொட்டுகொட தம்மாவாச மகாநாயக்க தேரரின் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பங்குபற்றிய ஜனாதிபதிக்கு 42 ஆவது உபசம்பதா நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவுச் சஞ்சிகை வழங்கி வைக்கப்பட்டது. (7)



# அரசிற்கு கடன் வழங்கவுள்ள சீனா

மத்திய அதிவேக நெடுஞ் சாலைத் திட்டத்தின் ஒரு பகு தியை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு ஒரு பில்லியன் டொலர் கடனை வழங்க சீனா முன்வந்துள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ் சாலைத் திட்டத்தின் கடவத்த தொடக்கம் மீரிகம வரையான, பகுதியை அமைக்கவே சீனா வின் ஏற்றுமதி.இறக்குமதி வங் கியே (எக்சிம் வங்கி) இந்தக் கடனுதவியை வழங்கவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 1.1 பில்லி யன் டொலர் ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளது. இதில், 85 வீதத்தை சீனாவிடம் கடனாகப் பெறவும் 15 வீதத்தை உள்நாட்டு வங்கி களிடம் அரசாங்கம் திரட்டவும் அமைச்சரவை அனுமதி அளித் துள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ் சாலைத் திட்டத்தின் முதலாவது கட்டமாக 37.09 கி.மீ.தூரமுள்ள பகுதியை அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (7)



# போராட்டத்திற்கு அங்கஜன் ஆதரவு

கல்முனை பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு கோரி மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டக்களத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேரில் சென்று ஆதரவு தெரிவித்தார்.

அவர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் முற்போக்கு தமிழர்கள் அமைப்பின் உறுப்பினர்களுக்கு ஆதரவு தெரி வித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## விவேக சிந்தனை

1897 இலே ஒரு நாள்.

இந்திய நாட்டின் தென்பகுதியிலே உள்ள ஒரு சின்ன துறை முகம்--பாம்பன்!

இராமநாதபுரம் மன்னர், ராஜா பாஸ்கர சேதுபதி அங்கே யாருக்காகவோ மிகவும் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கின் றார். தமது குடி படைகளோடு காத்துக் கொண்டு இருக்கின்றார்.

கொஞ்ச நேரத்தில் அவர் எதிர்பார்த்த கப்பல் கரைக்கு வந்து சேர் ந்தது. அவர் யாருக்காக காத்துக் கொண்டு இருந்தாரோ அவரு டைய முகம் தெரிந்தது. அது சுவாமி விவேகானந்தருடைய முகம்.

1893 இலே செப்டெம்பர் மாதத்தில் அமெரிக்காவில் நடந்த சர்வ சமய உலக மாநாட்டிலே பேசி உலகப் புகழ் பெற்ற விவேகானந்தர் அப்போதான் தாய் நாடு திரும்புகின்றார்.

கரைக்கு வந்ததும் சுவாமிகள் தம்முடைய பாதத்தை இந்திய மண்ணில் வைப்பதற்காக வந்தார்.

அதற்கு முன்னர் இந்தப் பாதத்தை என்னுடைய தலையிலே வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் மன்னர். இந்த வார்த்தைகள் சுவாமிகளை மெய்சிலிர்க்க வைத்து விட்டதாம்.

சேதுபதியை கட்டிப்பிடித்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினா ராம். அதன்பின் விவேகானந்தரை சேதுபதி மன்னர் இராமேஸ் வரத்திற்கு அழைத்துக் கொண்டு போனார். அலங்காரம் செய்த ஒரு வண்டியிலே உட்கார வைத்தார். அந்த வண்டியை தன் கையா லேயே இழுத்துக் கொண்டு இராமேஸ்வரம் வீதிகளில் சுற்றி வந்தார். அரசு ஆன்மீகத்திற்கு கொடுத்த மரியாதை அது.

இங்கிலாந்து நாட்டிலே ஒக்ஸ்போர்டு சர்வ கலாசாலையிலே அறிஞர் மாக்ஸ்முல்லர் பணியாற்றிக் கொண்டிருந்த காலம், மாக் ஸ்முல்லர் சமஸ்கிருத மொழியிலே ஆழ்ந்த ஞானம் உள்ளவர். நான்கு வேதங்களைப் பற்றியும் 40 வருடங்கள் ஆராய்ச்சி செய்தார். பின் ஆங்கிலத்திலேயே வெளியிட்டார்.

இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றியும் ஒரு நூல் வெளியிட்டி ருக்கின்றார். பரமஹம்சரின் சீடர் விவேகானந்தர். விவேகானந்தரை சந்திக்க வேண்டும் என்று மாக்ஸ்முல்லர் மிகவும் ஆவலாக இருந் தார்.

இரண்டு பேரும் சந்திக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் வந்தது. மாக்ஸ்முல்லரைச் சந்தித்தபோது விவேகானந்தர் ஞான கங்கை யின் ஆழத்தை இன்றுதான் கண்டேன் என்றார்.

மாக்ஸ்முல்லர் என்ன சொன்னார் தெரியுமா? ஆன்மீக எவ ரெஸ்ட்டை நான் இன்றுதான் பார்க்கிறேன் என்றார்.

நாம் எப்படி நினைக்கிறோமோ அப்படியே இந்த உலகத்தைப் பார்க்கிறோம் என்பது விவேகானந்தரின் கருத்து. அதற்கு அவரே ஒரு உதாரணம் சொல்கிறார்.

பட்டுப் போன அடிமரம் மட்டும் ஒரு இடத்திலே நின்றுகொண்டி ருந்தது. இருட்டிலே அதை ஒரு திருடன் பார்க்கின்றான். அது ஒரு போலிஸ்காரன் என்று நினைக்கிறான்.

தன்னுடைய காதலிக்காக காத்துக் கொண்டிருக்கும் ஒரு வாலிபனுக்கு அது அவளாகவே தெரிகின்றது.

. பேய்க்கதையைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு குழந்தை அதை ஒரு பேய் என நினைத்து அழ ஆரம்பித்து விட்டது.

ஆனால் அந்த வேளையிலெல்லாம் அது ஒரு மரக்கட்டை யாகவே இருந்தது. நாம் எப்படி நினைக்கின்றோமோ அப்படித்தான் இந்த உலகத்தைப் பார்க்கிறோம் என்றார் விவேகானந்தவர்.


அவரைப் பற்றி இன்னொரு செய்தியும் உண்டு. இளைஞர்கள் சில பேர் சேர்ந்து கொண்டு ஒரு மரத்திலே தொங்கிக்கொண்டிருந்த கயிற்றை குறி பார்த்து சுட்டிக்கிட்டிருந் தார்களாம். சரியா சுட முடியேல குறி தவறிப் போய்க்கிட்டே இருந்தது. பக்கத்தில் இதைப் பார்த்து சிரித்து கொண்டே விவேகானந்தர் நின்றுகொண்டிருந்தார்.

என்ன சிரிக்கிறீங்க. நீங்க தான் சுடுங்களேன் பார்க்கலாம் என்றான் ஒரு பையன். விவேகானந்தர் துப்பாக்கியை வாங்கிச் சுட்டார், குறி தவறாமல் சரியாகச் சுட்டார். பையன்களுக்கு ஆச்சரி யம். ஏற்கனவே உங்களுக்கு துப்பாக்கி சுடுவதில் பழக்கம் உண்டு போல இருக்கு என்றார்கள்.

அப்படியெல்லாம் ஒன்றும் கிடையாது. ஒரு நாள் கூட துப்பாக்கி யால் சுட்டதில்லை. ஆனால் குறி தவறாமல் என்னால் சுட முடிந்த தற்குக் காரணம் உண்டு என்றார். என்ன காரணம் என்று கேட்டார் கள்? மனதை ஒரு நிலைப்படுத்த என்னால் முடியும். அதுதான் காரணம் என்றார் விவேகானந்தர். மனதை ஒருமுகப் படுத்தினால் சாதிக்க முடியாததை எல்லாம் சாதிக்கலாம்.

இந்தக் காலத்து ஆசாமி ஒருத்தர் மனதை ஒருமுகப்படுத்துவதற் காக டிரயினிங் எடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். சுவரிலே வட்டமாக ஒரு கறுப்புப் புள்ளி வைத்து அதை தினமும் உற்றுப் பார்த் துக் கொண்டே உட்கார்ந்து இருப்பார். ஒரு மாதம் ஆகிவிட்டது. ஒரு நாள் உட்கார்ந்தவர் ரொம்ப நேரமாக எழுந்து வரவேயில்லை. என்ன விடயம்? என்று விசாரித்தார் வீட்டுக்கார அம்மா. சுவரிலே வைத்திருந்த கறுப்புப் புள்ளியை காணவில்லை. அது தான் யோசித்துக் கொண்டிருந்தேன்! என்றார். அதற்கு அந்த அம்மா... நீங் கள் புள்ளி வைத்தது கொல்லைப்பக்கத்து சுவரிலே! இப்ப உட்கார்ந் திருக்கின்றது வாசல் பக்கத்து சுவருக்கு எதிரிலே! என்றாள்.

# நாடு பிளவுபடாமல் தடுக்க ஒரே வழி அதியுச்ச அதிகாரப் பகிர்வே-சம்பந்தன்



(திருகோணமலை)

அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால், நாட்டைப் பிளவுபடுத்த வேண்டிய தேவை இருக்காது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தெரிவித்தார்.

மேலும், இதற்கு ஊடகங்களின் பங்களிப்பும் முக்கியமானதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமக்கான அரசியல் தீர்வைக் காண்பது கஷ்டமான விடயமல்ல. ஆனால் அரசாங்கம் அதனை விரும்பிச் செய்ய வேண்டும். இந்த அரசியல் தீர்வை தாமதிக்க வேண்டிய அவசியமும் இல்லை.

இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாவிட்டால் ஒருபோதும் இந்த நாட்டில் இணக்கத்தை ஏற்படுத்த முடியாது.


இந்தவேளையில், ஊடகங்களுக்கும் பங்களிப்பு இருக்கின்றது. மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக சிங்கள, தமிழ் ஊடகங்கள் பங்களிப்புச்செய்ய வேண்டும். மக்கள் தாங்கள் கருத்தியலை தவறாக எடுத்தியம்புவதற்கு ஊடகங்கள் வழிவகுக்கக் கூடாது.

ஒரு நாட்டினுடைய ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கப்படுவதற்கு நீதிமன்றம் மற்றும் ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும். ஊடகங்கள் உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

இதேவேளை, நாட்டைப் பிரிப்பதைத் தவிர்ப்பதற்கு ஒரேயொரு வழி அதிகாரப் பகிர்வேயாகும். அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலம் நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் திருப்தியடைவார்களாக இருந்தால் நாட்டைப் பிரிப்பதற்கு வழியிருக்காது.

இந்த செய்தியையும் ஊடகங்கள் தெளிவாக மக்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டும். முக்கியமாக பெரும்பான்மை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இத்தாலி விபத்தில் இலங்கையர் மரணம்



(ரோம்)

இத்தாலியில் இடம்பெற்ற விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்தார்.

நாத்தாண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது துஷார சஞ்சீவ பெரேரா என்ற இலங்கையரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்த இலங்கையர் பயணித்த வாகனம் அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துக்கொண்டிருந்த போது திடீர் கோளாறு ஏற்பட்டது.

இதனால்வீதியில்வாகனத்தை நிறுத்திய போது பின்னால் வந்த பேருந்துடன் மோதியமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த இலங்கையர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தார்.

இந் நிலையில் விபத்து குறித்த மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# சமுர்த்திக் கொடுப்பனவு சகலருக்கும் பெற்றுக்கொடுக்கப்படும்-சஜித் உறுதி

(அம்பாந்தோட்டை)

உரிய தகுதிகள் இருந்தும் சமுர்த்திக் கொடுப்பனவைப் பெறாத சகலருக்கும் எதிர்வரும் வாரங்களுக்குள் சமுர்த்திக் கொடுப்பனவைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக, வீடமைப்பு, கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த



போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் போலிப் புள்ளிவிபரம் தயாரிக்கப்பட்டு, அதனைப் பயன்படுத்தி எமது நாட்டிலுள்ளவர்கள் வறுமையில் இருப்பதாக உலக நாடுகளுக்கு தெரிவித்தனர்.

இதனால் எமது நாடு வறுமை கூடிய நடுத்தர வருமானம் பெறும் நாடாக அடையாளம் காணப்பட்டு, எமது நாட்டுக்கு வழங்கப்பட்ட உதவிகள் நிறுத்தப்பட்டதுடன் உதவிகளுக்கு பதிலாக அதிகரித்த வட்டியின் கீழான கடன் வழங்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரண்டாம் மொழி வகுப்பு ஆரம்ப நிகழ்வு





(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பாடசாலை கல்வியை பூர்த்தி செய்த இளையோர் மற்றும் யுவதிகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமை புரியும் அதிகாரிகளுக்கான இரண்டாம் மொழி வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் இடம் பெற்றது

இந்து பௌத்த கலாச்சார பேரவை அனுசரணையில் மன்னார் மாவட்டத்தில் பேசாலை மன்னார் தீவக பகுதி அடம்பன் ஆகிய மூன்று பகுதிகளில் குறித்த இரண்டாம் மொழிக்கல்வி வகுப்பானது இடம் பெறவுள்ளது.

குறித்த பயிற்சி நெறியானது ஆறு மாத கால வகுப்புகளாக இடம் பெறுவதுடன் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் வழங்கிவைக்கப்படவுள்ளது. அதே நேரத்தில் விருப்பத்திற்கு ஏற்ப ஆங்கிலம் மற்றும் சிங்கள பயிற்சி நெறிகளை இலவசமாக கற்க கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-265)

# தன்னிடம் கற்றுக்கொள்ளுமாறு துட்டகைமுனு மன்னர்களுக்கு

## பிரதமர் ரணில் அறிவுரை


(மொனராகலை)

சிலர் தம்மை துட்டகைமுனு மன்னர்கள் என நினைத்துக் கொண்டு, தன்னை கடுமையாக விமர்சித்ததாகவும் அந்த துட்டகைமுனு மன்னர்கள் தற்போது கிராமங்கள் மற்றும் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படும் விதத்தை வந்து பார்த்து தன்னிடம் கற்றுக்கொள்ள முடியும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொனராகலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துட்டகைமுனு மன்னர்களின் காலம் போல் அல்ல அபிவிருத்தி என்றால் என்ன என்பது தற்போதே உணரப்படுகிறது.

ஊடகங்கள் மூலம் நாங்கள் அபிவிருத்தியை செய்யவில்லை. கிராமங்களுக்கு சென்று அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.



இரண்டு கட்சிகள் இணைந்து ஆட்சி செய்த காரணத்தால், சில அசௌகரியங்கள் ஏற்பட்டன.

தற்போது நாங்கள் தனித்து ஆட்சி நடத்துவதால், அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த முடிந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ தரப்பினரையே இங்கு துட்டகைமுனு மன்னர்கள் எனக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



**நாவற்குழி மகாவித்தியாலய தரம் இரண்டு மாணவர்களின் மாதிரி சந்தை கடந்த வியாழக்கிழமை அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.**

# தமிழ், சிங்கள வியாபாரிகளை ஒன்றிணைத்து வர்த்தக சங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும்

## அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்து





(திருகோணமலை)

தமிழ்.சிங்கள வியாபாரிகளை ஒன்றிணைத்து வர்த்தக சங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்தினார்.

திருகோணமலை - குளக்கோட்டன் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் வகையில் தமிழ், சிங்கள வியாபார சங்கம் ஒன்றை அமைக்க வேண்டும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக இருக்கின்ற, நாட்டை நேசிக்கின்ற நாட்டின் முன்னேற்றத்தை விரும்புகின்ற முஸ்லிம் மக்களையும் நாங்கள் எம்முடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தெற்காசியாவில் மிக முக்கியமான இடமாக கிழக்கு மாகாணமும் அதிலும் மிக முக்கியமாக திருகோணமலையும் காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்ற இயற்கை துறைமுகத்தை அமெரிக்க நிறுவனங்களுக்கு வழங்கு வது தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் இன்று 24ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது மதத் தலைவர்கள் கலந்து கொள்வார்கள். இதிலே இது தொடர்பான விடயங்கள் பேசப்படவுள்ளன.

இதேவேளை சீனாவில் உள்ள கூட்டுறவு வங்கி முறைமையை இலங்கையிலும் உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கப்பட்டால் வியாபாரிகளின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை வியாபாரிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.மூன்று தசாப்தங்களாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வியாபாரிகள் தங்களுடைய வியாபாரத்தை உயர்த்துவதற்காக எவ்வாறான வழிகளை செய்ய வேண்டும் எனவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தில் அதிகளவான வியாபாரம் செய்யக்கூடியவர்கள் முஸ்லிம்களாக காணப்படுகின்றார்கள். எங்களுக்கு வியாபாரம் செய்ய முடியாத நிலை உள்ளது.

அவர்கள் நாங்கள் விற்கும் விலையை விட குறைவான விலைக்கு விற்கிறார்கள் எனவும் அதனால் மக்கள் அவர்களையே தேடிச் செல்வதாகவும் வியாபாரிகள் சுட்டிக்காட்டினர்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பியந்த பத்திரன, மற்றும் மகிந்த அணி திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் தயானந்த ஜெயவீர மற்றும் திருகோணமலை நகர சபையின் பொது ஜன பெரமுன அணியைச் சேர்ந்த சுசந்த ஜெயலத் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

## உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 255 ஆக அதிகரித்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது காயமடைந்த பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவர் நீர்கொழும்பு கெரவலப்பிட்டிய தேவாலயக் குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவராவார்.

சித்ராங்கனி பெரேரா என்ற இவரின் மகனான கட்டான பிரதேச சபை உறுப்பினர், மருமகள் ஆகியோர் குண்டுத்தாக்குதலின் போது ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் சித்ராங்கனியின் மரணத்தையடுத்து உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 255 ஆக அதிகரித்தது. (இ-7)

## யாழ். யோகா உலக மாணவன் யோகாப் போட்டியில் தங்கப்பதக்கம்



யோகா வெற்றியாளர்- 2019 (yoga champion ship) நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது இந்நிகழ்வை சுவாமி விவேகானந்த கலாசார மையத்தின் அனுசரணையுடன் அட்டாங்க யோக மந்திர் நடத்தியிருந்தது. வெளிநாடு மற்றும் உள்நாட்டுப் போட்டியாளர்கள் இப்போட்டியில் பங்கெடுத்தனர்.இந்நிகழ்வில் 14 வயதிற்கும்20 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்கள் பிரிவில் யோகா உலகம் அமைப்பின் மகீசன் அபிசான் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றார். யாழ்.யோகா உலகம் யோகா கலைஞர்களை சர்வதேச தரத்திற்கு வளர்த்தெடுக்கும் வகையில் பல்வேறு முனைப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் நல்லூரில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபம், கம்பன் கோட்டம் ஆகிய இரு இடங்களில் யோகா விசேட பயிற்சிகளை வழங்கி வருகின்றது.யோகா போதனா சிரியர்களாக சி.உமாசுதன், யோ. பிரசாத் ஆகியோர் பணிசெய்கின்றனர், யோகா கலைத்துறையில் சாதிக்க முனையும் 8 வயதிற்கு மேற்பட்ட பல்வேறு தரப்பினரும் தமது யோகா பயிற்சிநெறிகளில் இணைந்து பயனடைய முடியுமென்று யோகா உலகம் அறிவித்துள்ளது.(இ-7)

## வெங்காயவெடி மூலம் குடும்பப்பெண் படுகொலை கணவனைத் தேடி பொலிஸார் வலைவீச்சு

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட துடரிக்குளம் பகுதியில் வெங்காய வெடி மூலம் மனைவியை கொடூரமான முறையில் கொலை செய்த கணவனை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

கடந்த 21 ஆம் திகதி மாலை மாலை 7.30 வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட துடரிக்குளம் பகுதியில் பெண்ணொருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டனர்.

உள்ளூரில் மிருகங்களை வேட்டையாடுவதற்கு பயன்படுத்தப்படும் வெங்காய வெடி என அழைக்கப்படும் வெடிபொருள் மூலமே நான்கு பிள்ளைகளின் தாயான 40 வயதுடைய ரவிச்சந்திரன் அந்தோனியம்மா என்ற குடும்பப்பெண்ணே மேற்படி படுகொலை செய்யப்பட்டுள்ளார். குறித்த வெடியினை அவரது தலைப் பகுதியில் வெடிக்க வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இக் கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் குறித்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியுள்ள நிலையில் செட்டிகுளம் பொலிஸார் நேற்று மோப்பநாயின் உதவியுடன் வீட்டிற்கு அருகேயுள்ள காட்டுப்பகுதியில் சந்தேகநபரை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

குறித்த பெண் வெங்காய வெடி மூலம் கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் குறித்த கொலையாளி அந்த வெடிபொருள் மூலம் படுகாயமடைந்த நிலையிலேயே தப்பியோடியுள்ளார் என்று செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (9)

## எதிரணி வேட்பாளர் யாராக இருந்தாலும் ஒரு பொருட்டல்ல

### ஐ.தே.க. திடம்



(கொழும்பு)

நாட்டில் அடுத்துவரும் எந்தத் தேர்தலாக இருந்தாலும் அதனை முகம்கொடுப்பதற்கு தேவையான பிரசாரப் பணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றது போன்றே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி என்பன இணைந்து பாரிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது வேட்பாளர் ஒருவரை கூட்டணியாக களமிறக்குவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தமது வேட்பாளர் யார் என்பது குறித்து அறிவிக்கப்படும். வேட்பாளர் குறித்த இறுதித் தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை வெற்றி கொள்ளத் தேவையான வேலைத்திட்டம் தமது தரப்பிடமே உள்ளதாகவும், எதிர்க்கட்சி எந்தவொரு வேட்பாள ரை அறிவித்தாலும், அவர் எமது கூட்டணிக்கு ஒரு பொருட்டல்ல எனவும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

281

இந்த இலக்கிய முயற்சிகள் அரசியல் பரப்பில் குறிப்பிடக் கூடிய தாக்கம் எதனையும் ஏற் படுத்தாவிடினும் அவை படைப்பு இலக்கியத்தை ஊக்குவித்தன எனப் பேராசிரியர் கைலாசபதி இதையிட்டு எழுதியிருந்தார்.

1920-1948 காலத்தின் நிகழ்வு களைத் தொடர்ந்து தீவிரமானதொரு தமிழ்க் கலாசார இயக்கம் எழுந்தது. பேராதனைப் பல்கலைக்கழகம் என அறியப்படும் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறைப் பேராசிரி யராக இருந்த அறிஞரும் தேசப்பற் றாளருமாகிய வணக்கத்திற்குரிய டாக்டர் சேவியர் ஸ்ரனிஸ்லாஸ் தனி நாயகம் அடிகள் 1948 இலிருந்து 1970 வரையிலான காலத்தில் இக்கலாசார இயக்கத்தின் வழிகாட்டும் ஒளி யாகத் திகழ்ந்தார்.

தனிநாயகம் அடிகள் பல்கலைக் கழகத்தின் இளம் கல்விமான்களைத் தமிழரின் ஒதுக்கப்படும் கலாசாரத் தையிட்டும் அவர்களது கவலைக் குரிய நிலை பற்றியும் சிந்திக்கும் வகை யில் தூண்டினார்.

இதன் விளைவாக அவர்களுடைய சிந்தனைப் பரப்பில் உதித்த புதிய விடயங்கள் அவரால் சென்னையில் (1956-66) வெளியிடப்பட்ட தமிழ்க் கலாசாரம் என்ற கால ஏட்டில் பிர சுரிக்கப்பட்ட கட்டுரைகளில் பிரதிப லித்தன.

இக்கட்டுரை இலங்கைத் தமிழர் ஒடுக்கப்படும் விடயத்திற்கு முக்கியத் துவம் வழங்கியிருந்தன. இவை தவிர இவ்விடயத்தையிட்டு ஆழமாகச் சிந்திப்பதற்குத் தூண்டுகோலாக அமைந்தன.

1960களில் மலேசியப் பல்கலைக்கழகத்தில் இந்தியக் கல்வித் துறைக்குப் பேராசிரி யராக கடமையாற்ற நியமனம் பெற்ற தனிநாயகம் அடிகள் தமிழ் ஆராய்ச்சியை முன்னெ டுப்பதற்கான பணிக்குத் தனது சேவையை அர்ப்பணித்தார்.

புகழ்மிக்க அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு (International Tamil Conference) என்ற விடயத்தை ஆரம்பித்து வைத்த பெருமை அவரையே சாரும்.

தமிழ் ஆராய்ச்சிக்கான அனைத்துலகக் கழகம் (International Association of Tamil Research) அவரால் ஆரம்பிக் கப்பட்டு அனைத்துலகத் தமி ழாராய்ச்சி மகாநாடுகள் தொடர்ந் தும் ஊக்கத்துடன் நடத்தப் பட்டமைக்கும் அவருடைய இடையறா முயற்சியே கார ணமாக இருந்தது.

இந்த ஆராய்ச்சி மகாநாடு கள் சர்வதேச அறிஞரின் கவ னத்தை ஈர்த்ததுடன் தமிழ் ஆராய்ச்சியின் முன்னேற்ற நிலைக்கும் உதவின. இவர்க ளுள் பேராசிரியர் க.கணபதிப் பிள்ளை முக்கியமானவராகத் திகழ்ந்தார்.

இவர் எழுதிய சங்கிலி (1956) நாடகம் பலரின் பாராட்டையும் பெற்றது. நாட்டுக்கூத்துக் கலைக் குத் தன்னை அர்ப்பணித்த கலா நிதி சு.வித்தியானந்தன் அத்து றையை மேம்படுத்த பெரும ளவு பங்களிப்புச் செய்தார்.

கலைப்புலவர் கே. நவரத்தி னம் எழுதிய 'Tamil Element in Ceylon Culture' என்ற நூலும் எச்.டபிள்யூ. தம்பையா ஆக்கிய 'The Lows and Customs of the Tamils in Ceylon' என்ற நூலும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய இரண்டு சிறந்த ஆக்கங்க ளாகும்.

மேலும் சிறந்தகல்விமான்க ளான பேராசிரியர் கா. இந்திர பாலா, பேராசிரியர் எஸ். பத்ம நாதன் ஆகிய இருவரும் முறையே ஆக்கியளித்த 'Dravidian Settlements in Ceylon and the Beginning of the Kingdom of Jaffna, 'The Kingdom of Jaffna' என்ற ஆய்வு நூல் கள் அவை தோன்றிய காலத்து டன் முக்கிய தொடர்பை உடை யவனாய் காணப்பட்டன.

1948 இலிருந்து 1970 வரை யில் தோன்றிய வளமான ஆக்க இலக்கியத்தின் இடத்தை விரை வில் போராட்ட இலக்கியம் பிடித் துக் கொண்டது. இந்த மாற்றத்தை யிட்டுப் பேராசிரியர் கைலாசபதி பின்வருமாறு கூறுகின்றார்.

1948 இல் இருந்து 1970 வரையிலான இலக்கிய உணர்வெ ழுச்சி தன் காலத்தை முடித்துக் கொண்டது போல் தோன்றுகின்றது. சமுதாயத்தின் உயர்மட்டத்தில் தோன்றிய இவ் வெழுச்சி சமுதாயம் முழுவதையுமே ஏதோவோர் வகை யில் தொடவே செய்தது.

மொழி, கலாசார உணர்வுகள் ஒரு வேளை முழுச்சமுதாயத்திற்கும் பொதுவாகக் காணப்பட்டபோதும் அவற்றின் முக்கியத்துவமும் தொடர் பும் வெவ்வேறு சமுதாயக் குழுவி னராலும் வர்க்கத்தினராலும் வெவ் வேறு வகைகளில் உணரப்பட்டன.

மேலும் ஆரம்பத்தில் வெறுமனே உணர்ச்சிவசமான குறியீட்டு வகை யினதாக இருந்த இவை பின்னர் மக்க ளின் அன்றாட சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை உள்ளடக் கியதாகப் பரிணமித்தன.

மேற்படி புலமைசார் இலக்கியங் கள், சிறுபான்மைத் தமிழரின் உரி மைகள் சிங்கள அரசினால் பறிக்கப் பட்டுக் கொண்டிருந்த காலத்தில் எழுந்தவை.

தமிழரின் உன்னதமான கடந்த காலம் அவர்களின் தமிழ் அரசு, தமிழ் மொழி, கலாசாரம், பாரம்பரியப் பிர தேசம் போன்ற விடயங்கள் சம்பந்த மாகப் பாராளுமன்றத்தில் விவாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று, தமி ழர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக் கப்பட்டுக் கொண்டிருந்த வேளை யில் இவ் இலக்கியங்கள் அவ ர்களின் தேசியவாத உணர் வைக் கிளறிவிட்ட காரணிக ளாகக் காணப்பட்டன.

இவற்றின் விளைவாக தமிழ்க் கல்விமான்களும் தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழ் மாணவரும் விடுதலை வேட்கை கொண்டவர்களும் தமிழரின் இந்த நிலைமைக்கு அடிப்ப டைக் காரணங்கள் என்ன வென அறிவதற்காக தமிழரின் வரலாற்றுப் பின்னணியை அறியமுற்பட்டனர்.

17, 18 ஆம் நூற்றாண்டுக் காலங்களில் எழுந்த யாழ்ப் பாண வைபவமாலை, கைலாய மாலை, வையாபாடல் போன்ற ஆரம்பத் தமிழர் வரலாறு பற் றிக் கூறும் நூல்களையும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத் தில் முதலியார் சி.இராசநாய கம் (1870-1940) Tamils of Ceylon in 1920 என்ற ஆக்கத்தையும் ஏ.முத்துத்தம்பிப்பிள்ளை, கே. வேலுப்பிள்ளை ஆகியோரின் நூல்களையும் அவர்கள் ஆர்வத் துடன் ஆய்வு செய்தனர்.

(தொடரும்)



எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

# "90 வீதமானவர்களுக்குத் தகுதியில்லை"

# வாக்குகளை இலக்காகக் கொண்ட அரசியல்வாதிகளுக்கு

# நாட்டைப்பற்றி சிறிதளவும் அக்கறையில்லை

## ஜனாதிபதி மைத்திரி அதிருப்தி

(இரத்தினபுரி)

வாக்குகளை மாத்திரமே இலக்காகக் கொண்டு செயற்படும் அரசியல்வாதிகளுக்கு நாட்டைப் பற்றி சிறிதளவும் அக்கறையில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி வெளியிட்டார்.

இரத்தினபுரி நிவித்திகலை சுமன மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மூன்று மாடிக் கட்டட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் எந்த அரசாங்கம் ஆட்சி அமைத்தாலும் போதைப் பொருள் பாவனையை ஒரு போதும் கட்டுப்படுத்த முடியாது. வாக்குகளை மாத்திரமே இலக்காகக் கொண்டு செயற்படும் அரசியல்வாதிகளுக்கு நாட்டைப்பற்றி சிறிதளவும் அக்கறை இல்லை.

நாட்டில் நூற்றுக்கு பத்து வீதமான அரசியல்வாதிகள் மாத்திரமே அரசியலுக்கு தகுதியானவர்களாக இருக்கின்றனர். எஞ்சிய தகுதியற்ற அரசியல்வாதிகளே அதிகமாக தீய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அரசியல்வாதிகளுடன் சேர்ந்து அரச திணைக்களங்களில் பணியாற்றும் அரச அதிகாரிகளும் தீய வழியில் செல்கின்றனர்.

அரச அதிகாரிகளிலும் நூற்றுக்கு 10 வீதமானவர்களே ஒழுக்கமானவர்களாக உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 8000 வெளிநாட்டவர்களை நாடு கடத்த தயாராகும் அரசு

நுழைவிசைவு காலாவதியான நிலையில், இலங்கையில் தங்கியுள்ள 8000 வெளிநாட்டவர்கள் இலங்கையில் இருந்து நாடு கடத்தப்படவுள்ளனர். இதற்குத் தேவையான நிதி மற்றும் ஒழுங்குகளைச் செய்வதற்கு, அமைச்சரவையின் ஒப்புதலை உள்நாட்டு விவகார அமைச்சு கோரவுள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதலுக்குப் பின்னர், நுழைவிசைவு காலாவதியான பின்னரும், இலங்கையில் தங்கியுள்ள 7900 வெளிநாட்டவர்கள் பற்றிய தரவுகளை குடிவரவுத் திணைக்களத்தின் புலனாய்வு அலகு கண்டறிந்துள்ளதாக, குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பசன் ரத்நாயக்க தெரிவித்தார்.

"இவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலா நுழைவிசைவில் வந்தவர்கள். தற்போது விடுதிகள் கட்டுமானத் துறைகளிலும் உணவகங்கள், விவசாயப் பண்ணை களில் பணியாற்றுவதுடன், வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

நுழைவிசைவு காலாவதியான பின்னரும் தங்கியிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். குறிப்பாக 1,680 இந்தியர்கள், 936 பாகிஸ்தானியர்கள், 683 சீனர்கள், 291 மாலைதீவு நாட்டவர்கள், 152 பங்களாதேஷ் நாட்டவர்கள், 42 ஜப்பானியர்களும் இதில் உள்ளடங்குகின்றனர்.

மேலும், நெதர்லாந்தைச் சேர்ந்த 541 பேரும், உக்ரேனைச் சேர்ந்த 167 பேரும், சவுதி அரேபியாவைச் சேர்ந்த 172 பேரும், ரஷ்யாவைச் சேர்ந்த 157 பேரும், லெபனானைச் சேர்ந்த 157 பேரும், நைஜீரியாவைச் சேர்ந்த 130 பேரும், பிரான்சைச் சேர்ந்த 110 பேரும், பிரித்தானியர்கள் 44 பேரும், நுழைவிசைவு காலாவதியான பின்னரும் இலங்கையில் தங்கியுள்ளனர்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இருவேறு விபத்துக்களில் இரண்டு பெண்கள் மரணம்

(வெலிகம்பிட்டிய)

நீர்கொழும்பு வீதியின் கந்தானை, வெலிகம்பிட்டிய பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கனரக வாகனம் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிரில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது.

விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதியான பெண் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இதேவேளை கல்கிஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் பேருந்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1758


### அஞ்சலி

அழகு முகத்தில் மட்டும் இல்லை பல நேரங்களில் மனதில் சில நேரங்களின் வார்த்தைகளில்



### சுவாதி

எத்தனை பொண்ணுங்க விட்டுட்டுப் போனாலும் கவலைப்படக்கூடாது... எடிசனுக்குக் கூட ஆயிரம் தடவை முயற்சி பண்ணியும் கடைசியா கிடைச்சது பல்புதான்



### ரேஷ்மி

ஸ்கூல் டூர் போறோமே... நீ வரலைனு சொல்லிட்டியாமே ஏன்? இல்ல சேர் டூர் போயிட்டுவந்த பிறகு அதைப்பற்றி இங்கிலிஸ்ல கட்டுரை எழுதச் சொல்லுவீங்களே அதுதான்




### ஜானகி

எல்லாத்தையும் மேலே இருக்கிறவன் பார்த்துப்பான்னு சொன்னது உங்க மூளையைத்தான்



### ஹரிப்பிரியா

கல்யாணத்தைப் பண்ணிப்பார் வீட்டைக் கட்டிப் பார் என்கிறதோட நிறுத்தாமல் பண்டிகைக் காலத்தில வீட்டைச் சுத்தம் பண்ணிப் பார் என்கிறதையும் சேர்த்திடலாம்



### கோமதி

அடிபட்டதைவிட அதிக வலி தரக்கூடியது வலிக்குதான்னு கேட்க ஆளில்லாத வெறுமை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தனியார் பல்கலையை அரசு பொறுப்பேற்க சட்ட ரீதியான தகைமையில்லை

## ஹிஸ்புல்லா எதிர்ப்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கான சட்ட ரீதியான தகைமை இல்லை என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இது குறித்து அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தான் தயார் என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தை அவசர சட்ட ஒழுங்குவிதிகளின்கீழ், அரசாங்கத்திற்கு பொறுப்பேற்க வேண்டும் என கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பான மேற்பார்வைக் குழு பாராளுமன்றத்தில் பரிந்துரைத்தது.

குறித்த பல்கலைக்கழகம் தொடர்பில் தயாரித்துள்ள கண்காணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டது.

குறித்த பல்கலைக்கழகத்தின் தலைவரான முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் மகன் ஹிராஸ் ஹிஸ்புல்லா கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி, கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பான மேற்பார்வைக் குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது, குறித்த பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக, நிதி கிடைக்கப்பெற்ற முறைமை தொடர்பில் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவரிடம் பெறப்பட்ட வாக்கு மூலம் குறித்த விசாரணையில் தெரியவந்ததாக அந்தக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய, மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு நிதி கிடைத்த முறைமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சு மற்றும் சவுதி அரேபிய தூதரகம் ஆகியவற்றுடன் விரிவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டது.

குறித்த பல்கலைக்கழகத்தை மட்டக்களப்பில் நிறுவுவதற்கு 35 ஏக்கர் காணி பெற்றுக்கொடுக்கப்பட்டபோதிலும், அதற்காக மேலும் 8 ஏக்கர் பரப்புக் காணி, பலவந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், இதன்போது தங்கள் தரப்பினர் எந்தவொரு தவறையும் இழைக்கவில்லை என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

தற்போதுள்ள சட்டத்திற்கு அமைய தங்களது நிறுவனத்தைக் கைப்பற்ற முடியாது என்றும், அதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

அதேவேளை பேச்சுவார்த்தை நடத்த தாங்கள் தயார் எனவும், அரசாங்கத்துடன் இணைந்தோ அல்லது அரசாங்கம் தங்களது முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தோ அதற்கமைய செயற்படவும் தாங்கள் தயார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சீயோன் தேவாலயம் மீதான தற்கொலை குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து விசேட வழிபாடுகள்





(மண்முனை)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உள்ளிட்ட இலங்கையின் எட்டு இடங்களில் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்துள்ளன.

இந் நிலையில் மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன.

குறித்த வழிபாடுகள் மட்டக்களப்பு, மண்முனை வடக்கு



பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சின்ன ஊறணியில் நடத்தப்பட்டன.

உயிரிழந்தவர்களுக்காக சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நாட்டில் நீடித்த அமைதி வேண்டியும் பிரார்த்தனை செய்யப்பட்டது. (இ-7)

# கடலில் நீராடச் சென்ற தந்தையும் மகளும் பலி! தாயும் மற்றொரு மகளும் வைத்தியசாலையில்

(கிரிந்த)

கிரிந்த பகுதியில் கடலில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர். அத்தோடு மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த கடற்கரைக்கு நீராடச் சென்ற தந்தையும் மகளும் உயிரிழந்த நிலையில், தாயும் மற்றைய மகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் தாயின் நிலைமை மோசமடைந்துள்ளதால் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-7)

## புகையிரதம் மோதி இளைஞர் பலி!

(ஹிக்கடுவ)

ஹிக்கடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புகையிரதத்துடன் மோதுண்டு இளைஞன் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோனபினுவல பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞனே காலி நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மோதுண்டு உயிரிழந்தார். (இ-7)

## திருகோணமலையில் 24 மீனவர்கள் கைது

(திருகோணமலை)

திருகோணமலை, மலைமுந்தல் கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 24 மீனவர்களை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்ததோடு, அவர்களிடமிருந்து மீன்பிடி உபகரணங்களையும் கைப்பற்றினர்.

சட்டவிரோத மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த குற்றச்சாட்டிலேயே குறித்த மீனவர்கள் கைதுசெய்யப்பட்ட-தாக கடற்படையினர் தெரிவித்தனர். (இ-7)

## பாடகி இந்திராணி காலமானார்



(கொழும்பு)

பிரபல சிங்களப் பாடகி இந்திராணி சேனாரட்ன நேற்றுக் காலமானார்.

83 வயதான அவர் உடல் நலக்குறைவால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.


இவர் "கயா கீதயன் கேம் வெல் எலியே" (Gaya Geethayan Game Wel Eliye) என்ற சிங்களப் பாடலூடாக பிரபல்யமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 60 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 400 | 310 | 400 |
| தக்காளி | 80 | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 140 | 100 | 120 |
| கோவா | 100 | 70 | 60 | 100 |
| கரட் | 150 | 120 | 200 | 200 |
| பூசணி | 120 | 100 | 100 | 120 |
| புடோல் | 80 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 200 |
| சின்ன வெங்காயம் | 200 | 160 | 160 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 110 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 120 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 60 | 70 | 120 |
| லீக்ஸ் | 150 | 120 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 110 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 160 | 140 | 90 | 200 |
| போஞ்சி | 150 | 120 | 210 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 200 | 150 | 100 | 160 |
| வெங்காயப்பூ | 220 | — | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 60 | 40 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | — | 110 | 60 |




# காக்கையின் அருமை



ஒரு மரத்தில் ஆண் காகம் ஒன்றும் பெண் காகம் ஒன்றும் தன் குஞ்சுகளுடன் கூடு கட்டி வாழ்ந்து வந்தன. அங்கிருந்து சற்றுத் தொலைவில் உள்ள நகரத்துக்கு வந்து கிடைக்கும் உணவை உண்டு மாலை ஆனதும் தனது கூட்டுக்கு சென்றுவிடும். கூடவே குஞ்சுகளையும் கூட்டிக்கொண்டு போய் திரும்பி கூட்டில் விடும்.

தினம் தினம் மனிதர்கள் போடும் மிச்சம் மீதி உணவுகளைச் சாப்பிட்டு வாழ்ந்து வருவதை அந்த மரத்திலே வசிக்கும் மற்றப் பறவைகள் கேலி செய்தன. எங்களைப் போல் காட்டுக்குள் சென்று வாழ முடியாத உன்னால் எங்களுக்குத்தான் கேவலம். பேசாமல் நீ மனிதர்களுடனே போய் வாழ வேண்டியதுதானே என்று கேட்டன.

காகம் அந்தப் பறவைகளிடம் நாங்கள் மக்களிடம் சென்று சாப்பிட்டுப் பிழைப்பதால் நகரத்தில் சுத்தம் ஏற்படுகிறது. ஒரு விதத்தில் நாங்கள் மனிதர்கள் வீசும் கழிவுகளை உண்பதால் நகரம் சுத்தமாகிறது. ஆகவே நாங்கள் உழைத்துத்தான் சாப்பிடுகிறோம். அதுவும் அவர்களாகப் பார்த்துக் கொடுப்பதை நாங்கள் பகிர்ந்துதான் உண்கிறோம் என்று பதில் சொல்லியது.

இருந்தாலும் மயில், புறா, குருவி போன்றவைகள் காக்கைகளை கேலியும் கிண்டலும் செய்து கொண்டுதான் இருந்தன. நீங்கள் எல்லாம் கறுப்பாய் இருக்கிறீர்கள். அதனால் தான் மனிதர்கள் உங்களை அடிமை போல நடத்துகிறார்கள் என்று காக்கைகளின் நிறத்தையும் கேலி செய்து பேசின. மேலும் நீங்கள் மாமிசப் பட்சினிகள், எங்களுடன் நீங்கள் வசிப்பது எங்களுக்கு வருத்தமாக உள்ளது என்றெல்லாம் பேசின.

இதைக் கேட்ட காக்கைக் குஞ்சுகள் மனம் வேதனைப் பட்டு தாங்கள் பெற்றோரிடம் நாம் இங்கிருந்து போய் விடலாம் என்று சொல்லின. ஆண் காகம் உடனே தன் குஞ்சுகளைப் பார்த்து குழந்தைகளே மற்றவர்கள் பேசுவதற்கும் ஏசுவதற்கும் பயப்பட்டு நாம் கூட்டைவிட்டுச் சென்றோம் என்றால் நம்மால் எங்கும் வசிக்க முடியாது. எங்கு சென்றாலும் ஏதாவது ஒரு பிரச்சினை இருந்து கொண்டேதான் இருக்கும். நாம் அதனை அனுசரித்துப் பழகிக்கொண்டோம் என்றால் நம்மால் நன்றாக வாழ முடியும். ஆகவே மற்றவர்கள் சொல்வதைப்பற்றி கவலைப்படாமல் வாழக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய அருமை மற்றவர்களுக்குப் புரியும் போது எல்லாம் சரியாகிவிடும் என்று அறிவுரை கூறியது.

அந்த மரத்தில் வசித்து வந்த மயில்கள் கொஞ்ச நாட்களாக கவலையில் இருந்தன. தங்களுக்குள் வருத்தப்பட்டுக் பேசிக்கொண்டன. இதை கவனித்த ஆண் காகமும் பெண் காகமும் மயில்களிடம் சென்று ஏன் கவலையாயிருக்கிறீர்கள் என்று கேட்டன. மயில்கள் சோகமுடன் நாங்கள் மனிதர்களின் விவசாய நிலத்தில் பயிராகும் கதிர்களை மேய்ந்து விடுவதால் மனிதர்கள் எங்கள் மேல் கோபம் கொண்டு எங்களுக்கு மருந்து வைத்து அழிக்க முற்படுகிறார்கள். அது மட்டுமல்ல இந்த மரத்தில் வசிக்கும் எங்கள் அனைவரையும் வலை போட்டு பிடித்துச்செல்ல இன்றோ நாளையோ வருவதாகப் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று வருத்தத்துடன் சொன்னது.

காகங்கள் கவலைப்படாதீர்கள். இந்த மரத்தில் வசிக்கும் உங்களை காக்கும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்றன. இவர்களால் எப்படி எங்களைக் காப்பாற்ற முடியும் என்று நம்பிக்கை இல்லாமல் மயில்கள் காகங்களைப் பார்த்தன.

இவைகள் பேசிக்கொண்டிருந்த மறுநாள் நான்கைந்து மனிதர்கள் மரத்தின் அருகில் வந்து நின்று மயில்களை எப்படி பிடிக்கலாம் என பேசிக்கொண்டிருந்த பொழுது திடீரென்று அந்த மரத்திலிருந்து நூற்றுக் கணக்கான காகங்கள் கிளம்பி அந்த மனிதர்களை நோக்கி பறந்து வந்தன. வந்தவைகள் மனிதனின் தலை மேல் கொத்துவதற்குப் பாய்ந்து வர அங்கிருந்த மனிதர்கள் ஐயோ, அம்மா, என்று கூக்குரலிட்டுப் பயந்து தலைதெறிக்க ஓட ஆரம்பித்து விட்டனர்.

ஒரு சில நாட்கள் கழித்து அந்த மரத்தில் வசித்து வந்த மயில்கள் காகங்களிடம் வந்து உங்களுக்கு மிகவும் நன்றி. நீங்கள் இந்த மரத்தில் வசிப்பதால் எங்களுக்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கிறது. மனிதர்கள் இந்த மரத்திற்கு அருகில் வந்தாலே நீங்கள் கொத்தி விடுவீர்கள் என பயப்படுகிறார்கள். உங்களுக்கு மட்டும் எப்படி இத்தனை நண்பர்கள் என்று ஆச்சரியத்துடன் கேட்டன. காகங்கள் சிரித்தவாறு நாங்கள் பிழைப்புக்காக மனிதர்களை நாடினாலும் எங்களுக்கிடையில் எப்பொழுதும் ஒற்றுமையாய் இருப்போம். ஒருவருக்கு ஆபத்து என்றாலும் அனைவரும் உதவிக்கு வந்து விடுவோம் என்று கூறியது. மயில்கள் மிக்க நன்றி கூறி விடை பெற்றன..

ஒரு நாள் குருவிகள் கீச், கீச் என்று கத்தியவாறு அலை பாய்ந்து கொண்டிருந்தன. என்னவென்று எட்டிப்பார்த்த காகம் அங்கு ஒரு பாம்பு குருவிக் கூட்டை நோக்கிப் போவதை பார்த்து தன் குஞ்சுகளை காப்பாற்றுவதற்குத்தான் அவ்வாறு கத்துகிறது என்பதை புரிந்து கொண்டு ஆண் காகமும் பெண் காகமும் பாய்ந்து சென்று அந்த பாம்பை கொத்த ஆரம்பிக்க இவைகள் இருவரின் கொத்துதல்களை சமாளிக்க முடியாத பாம்பு விட்டால் போதும் என்று கீழே சர சரவென இறங்கிச் சென்றுவிட்டது. குருவிக்குஞ்சுகள் காக்கைகளிடம் வந்து மிக்க நன்றி சொல்லி அவர்களை கேலியும் கிண்டலும் செய்ததற்கு வருத்தம் தெரிவித்தன.

ஒரு முறை ஒரு வீட்டில் பெரிய விசேஷம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்த வீட்டில் இருந்தவர்கள் ஒரு இலையில் நிறையச் சாப்பாட்டை எடுத்து வந்து வீட்டிற்கு மேலே வைத்தனர். அப்பொழுது மேலே பறந்து கொண்டிருந்த பறவைகள் சாப்பாட்டின் வாசத்திற்கு கவரப்பட்டு அதை சாப்பிடுவதற்கு கீழே இறங்கின. உடனே அந்த வீட்டில் இருந்தோர் அந்தப் பறவைகளை விரட்டினர்.

சாப்பாட்டை மேலே கொண்டு வந்து வைத்துவிட்டு சாப்பிட விடாமல் விரட்டினால் என்ன அர்த்தம்? என்று பறவைகள் தங்களுக்குள் பேசிக் கொண்டன.

அப்பொழுது அந்த இரு காக்கைகள் பறந்து வந்து அந்த சாப்பாட்டை கொத்த ஆரம்பித்தன. உடனே அந்த மனிதர்கள் கையெடுத்து கும்பிட்டனர்.

மற்ற பறவைகளுக்கு ஒரே ஆச்சரியம்? அந்த காகங்களிடம் அதெப்படி எங்களைச் சாப்பிடவிடாமல் விரட்டிய மனிதர்கள் நீங்கள் சாப்பிடும்போது மட்டும் கையெடுத்து கும்பிடுகிறார்களே? என்று கேட்டன.

அந்த காகங்கள் நாங்கள் சாப்பிடுவதை, தங்களுடைய முன்னோர்களே அந்தச் சாப்பாட்டை சாப்பிடுவதாக மக்கள் நினைக்கிறார்கள், அதனால் தான் கைகூப்பி நன்றி தெரிவிக்கிறார்கள் என்றன.

இதை கேட்ட மற்ற பறவைகள் காகங்களின் அருமையை உணர்ந்து கொண்டன. தாங்கள் கேலி செய்து பேசியதற்கு மன்னிப்புக்கூறின.

(பிறரின் தோற்றம் முக்கியமல்ல, அவர்களின் நற் செயல்கள்தான் கவனிக்கப்படவேண்டும்).

## விடுகதைகளும் விடைகளும்

- இரண்டு பெண்கள், இரட்டைப் பிறவிகள் ஒருத்தி கீழே வந்தால் ஒருத்தி மேலே போவாள். அவர்கள் யார்?

  தராசுத் தட்டுகள்

- நிலத்திலே முளைக்காத செடி நிமிர்ந்து நிற்காத செடி. அது என்ன?

  தலைமுடி

- தொப்பை பயனுக்கு ஒரு வாசல் தோழனுக்கு இரண்டு வாசல் - அது என்ன?

  சட்டை

- தச்சர் கொத்தனார் செய்யாத தேர் தானே கிளம்பும் சித்திரத் தேர் - அது என்ன?

  புற்று

- சிவப்பு மொசைக் கொட்டை பகட்டும் பட்டுச்சட்டை அந்தச்சட்டை - அது என்ன?

  பட்டுப்பூச்சி

## வளமுடன் வாழ

வருவதும் போவதும் - இன்பம், துன்பம்
மிக மிக நல்ல நாள் - இன்று
மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிகப்பெரிய தேவை - சமயோசித புத்தி

மிகக்கொடிய நோய் - பேராசை
மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
கீழ்த்தரமான விடயம் - பொறாமை
நம்பக்கூடாதது - வதந்தி

ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
செய்யக்கூடாதது - தவறுகள்
செய்ய வேண்டியது - உதவி
விலக்க வேண்டியது - விவாதம்

உயர்வுக்கு வழி - உழைப்பு
நழுவக்கூடாதது - வாய்ப்பு

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

~ யாரோ

வலம்புரி
T.P: 021 567 1530
website: www.valampurii.lk

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் ஓய்வுபெற வேண்டும்

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அரசியல் பணியில் இருந்து ஓய்வுபெறுவதே அவர் தமிழ் இனத்துக்குச் செய்யக்கூடிய மிகப்பெரும் உதவியாக இருக்கும்.

இவ்வாறு நாம் கூறுவது அவருக்கு எதிராகவோ அன்றி அவரை வஞ்சிப்பதற்காகவோ அல்ல.

மாறாக சமகாலத்தில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் அத்தனை துன்பங்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையே காரணம் என்ற அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கின்ற இரா. சம்பந்தர் தனது அரசியல் பணியில் இருந்து ஓய்வுபெறுவது அவருக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மையாக அமையும்.

நீண்டகால அரசியல் அனுபவம் இரா.சம்பந்தர் அவர்களுக்கு உண்டாயினும் அவரின் முதுமை காரணமாகவும் தனது அரசியல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு ஒரு சிலரில் முழுமையாகத் தங்கியிருக்கின்ற தேவைப்பாடு இருப்பதன் காரணமாகவும் அவரால் தூர நோக்குடனும் இராஜதந்திர அடிப்படையிலும் இயங்க முடியாமல் உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

சுருங்கக்கூறின் இரா.சம்பந்தரின் முதுமை காரணமாக ஏற்படக்கூடிய இயலாமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சிலர்,

தங்கள் பாட்டில் தீர்மானங்களை எடுத்துக் கொண்டு சுயமாக இயங்குகின்றனர்.

அதிலும் நாங்கள் கூறினால் அதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வர் என்பது போலவும் இன்னமும் தங்கள் கட்சியே தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குடன் இயங்குவது போலவும் காட்டிக் கொள்வதில் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாட்டில் ஒன்றுதான் கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு மூன்று மாத கால அவகாசம் வழங்கிய கடிதமாகும்.

இவ்வாறான கடிதத்தின் உள்நோக்கம் என்ன என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள முடியாதவர்களல்ல.

தவிர, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக இருக்கின்ற இரா.சம்பந்தர் அவர்கள் கிழக்கு மாகாணத்தைக் காப்பாற்றத் தவறிவிட்டார்.

அரசாங்கத்தின் சலுகைகளுக்காகவும் முஸ்லிம் அரசியல்வாதிகளின் நட்புக்காகவும் கிழக்கு மாகாணத்தை தாரைவார்த்துக் கொடுத்து தமிழ் மக்களுக்கு அவர் அநீதி செய்து விட்டார் என்பதே உண்மை.

இந்த உண்மைகள் தமிழ் மக்களின் ஆழ் மனங்களில் ஆறாத ரணமாக உள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், தொடர்ந்தும் இரா.சம்பந்தர் அவர்கள் அரசியல் தலைமையில் இருப்பது ஆரோக்கியமானதல்ல.

ஆகையால் முதுமை காரணமாக அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்து விட்டு ஒதுங்கிக் கொள்வது அவரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படாமல் இருப்பதற்கான உபாயமாகும்.

# கல்முனை பிரதேச செயலக விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(லண்டன்)

மிகவும் இலகுவான முறையில் தீர்த்து வைத்திருக்க வேண்டிய கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் தரமுயர்த்தல் விடயம், இன்று இவ்வளவு தூரத்திற்கு வளர்ந்து இனங்களுக்கிடையேயான முறுகலை ஏற்படுத்தும அளவிற்கு வளர்ந்து விட்டது.

இதற்கான முழுப் பொறுப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏற்றுக் கொள்ள வேண்டும் என லண்டனிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

கடந்த மாகாண சபையில் பதினொரு உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுத்த போது, தமிழ்த் தலைமைகள், அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையின் உண்மைத் தன்மையைத் தெளிவுபடுத்தி, பேரம் பேசி பிரதேச செயலகத்தின் தரத்தை உயர்த்தி இருக்கலாம்.

அல்லது நல்லிணக்க அரசில் எதிர்க்கட்சி பதவியைப் பெற்றுக் கொண்ட போதாவது, இது விடயமாக பேரம் பேசி இருக்கலாம். எதுவுமே செய்யாமல் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் எதைப்பற்றியும் சிந்திக்காமல், பேரம் பேச வேண்டிய நேரத்தில் சோரம் போய் விட்டு, இப்போதும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழமையான கையா லாகாத தன்மையையே தொடர்ந்தும் காட்டுகின்றது.

கல்முனைப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதால் இஸ்லாமிய மக்களுக்கோ, அவர்களது நிலத்திற்கோ எதுவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இந்த விடயத்தில், முஸ்லிம் தலைமைகள் பொறுப்புடனும், நிதானத்துடனும் செயற்பட்டு இவ்விடயத்திற்கு பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி விநயமாகக் கேட்டுக் கொள்கின்றது.

சிறுபான்மை இனங்கள் நமக்குள் நாமே விட்டுக் கொடுப்பதற்கு முரண்டு பிடித்தால், எவ்வாறு பெரும்பான்மையிடம் நாம் அதிகார பரவலாக்கலை எதிர்பார்க்க முடியும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று தொட்டு இன்று வரை அனைத்து இன மக்களும் சமாதானத்துடனும் ஐக்கியமாகவும் வாழ வேண்டும் என்றே வலியுறுத்தி வருகின்றது.

இதன் அடிப்படையில் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கல்முனை மாநகர சபையில் ஆதரவு கொடுத்தது. ஆனால் பிரதேச செயலகத்தில் அமைந்திருந்த விநாயகர் கோவில் விடயத்தில் எவருடனும் கலந்தாலோசிக்காமல் மாநகர முதல்வர், நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, இந்துக்களின் மனதை நோகடிக்கும் செயல் என்று தெரிந்திருந்தும், தொடர்ந்தும் இன விரிசலுக்கான நிலைமையை ஏற்படுத்தினார்.

இந்த விடயத்தில் எமது கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு நாம் எவ்வளவோ எடுத்துக் கூறியும், பிரதி முதல்வர் என்ற பதவி மோகத்திற்கு ஆளாகி உறுப்பினர் காத்தமுத்து கணேசனும் மற்றும் உறுப்பினர் ஜெ. சுமித்திராவும் விலை போய்விட்டார்கள்.

இருந்தும் நாம் அவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுத்து, இனங்களுக்கிடை யேயான முரண்பாடுகளை வளாத்து, அதில் அரசியல் ஆதாயம் தேடமுற்படாமல் வழக்கை வாபஸ் வாங்குவதற்கு மாநகர முதல்வருக்கு அழுத்தம் கொடுக்குமாறு எமது உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டோம. ஆனால் அவாகள் அவ்வாறு செய்யாமல் அதற்கான பிராயச்சித்தமும் தேடாமல், தொடர்ந்தும் தங்கள் போக்கிலேயே நடந்து கொண்டார்கள்.

அது மட்டுமல்லாமல் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராகவும், கட்சியின் கட்டுப்பாட்டை மீறியும், இனங்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் தொடர்ந்து செயற்பட்டும் வந்தார்கள். இதன் காரணமாக, அவர்களை நாம் கட்சியில் இருந்து நீக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள விரும்பத்தகாத சூழ்நிலையை அனைவரும் உணர்ந்து, விட்டுக் கொடுப்புக்களை மேற்கொண்டு, இந்த விடயத்தில் அரசியல் ஆதாயம் தேடி மக்களை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லாமல், நிதானமாக நடந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொதுச்சட்டத்தின் கீழ் அனைத்து இனங்களும் உள்ளடக்கப்படுவார்கள்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கேகாலை)

பல பெண்களை திருமணம் செய்து கொள்ள முடியும் என்பதை முழுமையாக மாற்றியமைத்து அனைவரும் பொதுசட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுவார்கள் என எதர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கேகாலை நகரில் நேற்று முனதினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒருவர் எத்தனை திருமணம் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்ற முஸ்லிம் மத சட்டங்கள் பல எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். 72 கன்னிகள் தேவையென்று ஒரு அடிப்படைவாதி கருதினால் நாம் அனைவரும் இறக்க நேரிடும். அடிப்படைவாதம் நாட்டில் இருந்து முழுமையாக இல்லாதொழிக்கப்படும்.


மதத்தை அடிப்படையாகக் கொண்டு பொது சட்டத்திற்கு அப்பாற் சென்று எவரும் செயற்பட முடியாது. பல பெண்களை திருமணம் செய்து கொள்ள முடியும் என்பதை முழுமை யாக மாற் றியமைத்து அனைவரும் பொதுசட் டத்தின் கீழ் உள்ளடக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்திலை கழுவாத்துறை, அராலி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் நாகபடுவான், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், குமிழமுனை, 651ஆவது படைப் பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படைமுகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டாணிச்சூர் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பூவும் அறிவாளியும்



நறுமணம் வீசும் பூச்செடி சேற்றில் முளைத்தாலும் பாதகமில்லை. ஆனால் அதில் பூத்த மலர் சேற்றிலே விழுந்து விட்டால் அது பயனற்றுப் போகும். அதுபோன்ற அறிவாளிகள் பிறப்பு எக்குலத்திலும் எவ்வளவு இழிவாக இருந்த போதிலும் பாதகமில்லை. அவர் ஒழுக்கத்தில் தவறிவிட்டாலும் ஜாதி, மத, தேச, மொழி வெறியில் சந்தர்ப்பவசமாக சிக்கிக்கொண்டாலும் அவர் பயனற்றவராகி விடுகிறார்.

சேற்றிலோ சாக்கடையிலோ விழுந்த பூ அதுவரையில்தான் பயனற்றுப்போகும். ஆனால் அறிவாளி தரம் கெட்டு விடுவாராயின் அதைத் தொடர்ந்து எண்ணிறந்த மக்கள் தரம்கெட்டுப்போக நேரிடும்.

# ஆண்களுக்கான கபடிப்போட்டி; நெல்லியடி மத்திய கல்லூரி மகுடம்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியில் ஏக ஆதிக்கம் செலுத்தி நெல்லியடி மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 52:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

## பெண்களுக்கிடையிலான கபடி; கிளி/இந்துக்கல்லூரி அணி சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கபடிப் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 40:12 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

## விஜயரட்ணம் வெற்றிக்கிண்ணம் கே.சி.சி.சி. அணி இறுதியில்



விஜயரட்ணம் வெற்றிக் கிண்ணத்திற்காக ஞானம்ஸ் பெயின்ட் நிறுவனத்தினர் 2 ஆவது ஆண்டு புற்தரையில் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக் கொண்ட இருபது-20 துடுப்பாட்டத் தொடரின் பிளே ஓவ் (PLAY OFF) சுற்றில் முதலாவது தகுதிப் போட்டியில் (QUALIFIER NOT) கே.சி.சி.சி. அணி சென்றலைட்ஸ் அணியை 34 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி.அணி 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

துசி-39, பானுஜன்-31, ஜெயரூபன்-33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சி சென்றலைட்ஸ் அணியை சார்ந்த வியஸ்காந்-02, சாள்ஸ், டார்வின் தலா 01 இலக்கினை கைப்பற்றினர்.

177 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி 18 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

செல்ரன்-69, தசோபன்-18 ஓட்டங்களைப்பெற்றனர். பந்து வீச்சில் கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த துசி-03, பிரதீஸ்-02, சாம்பவன்-01 இலக்கினை கைப்பற்றினர். இப்போட்டியில் கே.சி.சி.சி. அணியைச் சார்ந்த துசி சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். (க)

## நகுலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணம் இறுதிப் போட்டியில் இமையாணன் மத்தி




வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் நகுலன் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியில் இமையாணன் மத்தி அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

வதிரி டயமன்ஸ் கழக மைதானத்தில் நடந்த அரையிறுதியா ட்டத்தில் இமையாணன் மத்தி அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இமையாணன் மத்தி அணி வீரர் சாருஜன் 17 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டு அசத்த இடைவேளைக்கு முன்னர் இமையாணன் மத்தி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை ஆடிய போதும் இரு அணிகளாலும் மேலதிக கோல்களைப் போட முடியவில்லை.

இதனால் ஆட்ட நேர முடிவில் இமையாணன் மத்தி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. போட்டியின் ஆட்ட நாயகனாக இமையாணன் மத்தி அணி வீரர் சதுர்ஜன் தெரிவு செய்யப்பட்டார். (க-60)



**கிளிநொச்சி கலவெட்டித்திடல் புளியம்பொக்கணையில் புதிதாக அமைக்கப்பட்ட தில்லைக்கணபதி சவாரித்திடலில் 70 சோடி மாடுகள் 5 பிரிவுகளில் போட்டியிட மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நடந்தேறியது. இங்கு முதல் பரிசாக துவிச்சக்கர வண்டிகளும் மற்றைய இடங்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டார். (க)**

## ஆறுமுகம்...

டார்.

இந்த விஜயத்தின்போது பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தியிருந்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திற்கு வந்த அவர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதன்பின்னர் கோயில் வீதியில் உள்ள முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரனுடைய இல்லத்திற்கு சென்று அவருடன் கலந்துரையாடியிருந்தார்.

இச்சந்திப்பினை முடித்துக்கொண்ட அவர் யாழ்.இந்திய துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரனையும் சந்தித்து கலந்துரையாடினார். (3)

## வவு.செட்டிகுளத்...

ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

செட்டிகுளம், துடரிக்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 4 பிள்ளைகளின் தாயாரான 40 வயது பெண் ஒருவர் வெங்காய வெடியை முகத்தில் வெடிக்க வைத்து கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார். குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் குறித்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியிருந்த நிலையில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

இந்நிலையில் நேற்று செட்டிகுளம் புகையிரத நிலையத்திற்கு முன்னால் உள்ள ஆலயத்தின் பின்புறமாக உள்ள காட்டுப் பகுதிக்குள் மறைந்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரின் கையிலும் வெங்காய வெடி காரணமாக காயம் ஏற்பட்டுள்ள நிலையில் குறித்த நபர் பொலிஸ் பாதுகாப்புடன் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் கணவரான 43 வயதுடைய து.ரவிச்சந்திரன் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (3,250)

## ரணில், மைத்திரி...

உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்று வவுனியாவில் இடம்பெற்ற தமிழீழ விடுதலைக்கழகத்தின் பேராளர் மாநாட்டின் பின் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கடந்த முப்பது ஆண்டு காலமாக குறிப்பாக பிரேமதாச காலத்தில் இருந்து அது உப செயலகமாக இயங்கினாலும் கூட அதனை தரமுயர்த்துவதற்கு பல்வேறு தடைகள் போடப்பட்டுக்கொண்டு இருக்கின்றது. அங்கே இருக்கின்ற முஸ்லிம் சமூகத்தினருக்கு இந்த செயலகம் எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது. எனினும் அதனை ஒரு பிரச்சினையானதாக எண்ணி தடை செய்து கொண்டு இருக்கின்றார்கள். அத்துடன் தொடர்ந்து வந்த அரசுகளும் தற்போதைய அரசும் கூட நாங்கள் இவ்வளவு ஆதரவு கொடுத்தும் கூட அதனை செயற்படுத்துவதில் கால தாமதத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றன.

இதற்காக நாங்கள் இந்த விடயத்தில் போராடுகின்ற ஏனைய கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான பூரண ஆதரவை நாங்களும் வழங்குவோம். இதனை நாங்கள் ஒரு தீர்மானமாக எடுத்ததோடு வேறு பல தீர்மானங்களையும் எடுத்துள்ளோம்.

இதேவேளை ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த அரசாங்கத்திற்கு கூட்டிக்கொடுப்பதாக முன்னாள் முதலமைச்சர் தெரிவித்த கருத்தை எவ்வாறு பார்க்கிறீர்கள் எனக் கேட்டபோது,

நாம் மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வருவதற்கும், ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வருவதற்கும் ஒரு நியாயமான தீர்வு எமக்கு கிடைக்கும் என்ற அடிப்படையில் தமிழ் மக்களும் இரு பெரும் கட்சிகளும் அமைத்த அரசாங்கம் தீர்வை தரும் என்ற அடிப்படையிலே அதற்கான செயற்பாடுகளை எடுத்துக்கொண்டு இருந்தோம். ஆனால் தற்போதைய நிலைப்பாட்டில் அவை நடப்பதற்கான வாய்ப்புக்கள் நிச்சயமாக இல்லை. ஆனால் இதனை தற்போது சொல்லவில்லை.

ஆரம்பத்தில் இருந்து இதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதாகவே சொல்லி வருகின்றேன். சிங்கள தலைமைகளை அதிகார பரவலாக்கத்திற்கு எதிரானவர்களாக இருக்கிறார்கள் என்றே நம்புகின்றேன். ஆகவே இது ஒரு பாரிய சிக்கலுக்குரிய விடயம். இருந்தாலும் இதற்கான அழுத்தங்கள் அனைத்தும் சர்வதேச அழுத்தத்தினால் எடுக்கப்பட்டு வருகின்றது.

அரசாங்கத்தின் மேல் எடுக்கப்படுகின்ற சர்வதேச அழுத்தங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் தீர்மானங்கள் போன்ற அழுத்தங்களின் காரணமாக இந்த அதிகார பரவலாக்கலிற்கான நடவடிக்கைகளுக்காக அரசியல் நிர்ணய சபைகள் உருவாக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கான முழுமையான ஒத்துழைப்பை நாம் கொடுத்து வருகின்றோம்.

அது மட்டுமன்றி மற்றைய விடயங்களிற்கும் எங்களால் முடிந்த வரை அழுத்தங்களை கொடுக்கின்றோம். அதேவேளை ஆதரவு மூலமாக கொடுக்கின்ற அழுத்தங்களையும் கொடுத்து வருகின்றோம். ஆனால் அரசு இதனை சரியான முறையில் செய்து வரவில்லை.

இந்த வகையில் கூட்டிக்கொடுப்பது என்றால் என்னவென்றோ அல்லது யாரை கூட்டிக்கொடுக்கிறோம் என்றோ தெரியவில்லை. ஒரு அரசாங்கம் இருக்கின்றது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே நாம் இதனூடாக அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்.

இது வழமையான செயற்பாடு. அதனை தான் நாம் செய்து கொண்டு இருக்கிறோம். அது எங்களுடைய கடமை. இதனை வேண்டாம் என்று தவிர்த்து விட்டு இருக்க முடியாது. கடந்த காலங்களில் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். மற்றவர்கள் செய்கின்ற போராட்டத்திலும் எங்களுடைய பங்களிப்பு இருந்திருக்கின்றது.

ஆகவே இவற்றிற்கு மத்தியில் நாம் ஒரு நியாயமான தீர்வையும் பெற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் எதிர் நோக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வையும் காண வேண்டும். இவ்வாறான விடயங்களில் நாம் எதனை கூட்டிக்கொடுக்கின்றோம் என்பது விளங்கவில்லை என மேலும் தெரிவித்தார். (3)

## புதிய உறுப்பின...

பில் யாழ்.மாநகர சபைக்கு தெரிவான அஜந்தா தனபாலசிங்கம் மற்றும் சுகந்தினி சிறிகரன் ஆகிய உறுப்பினர்கள் கடந்த மே மாதம் தமது உறுப்பினர் பதவியை சுய விருப்பில் இராஜினாமாச் செய்தனர்.

இதையடுத்து இரு வெற்றிடங்களுக்கும் அக்கட்சியின் சார்பில் பெப்சி பிலீப் ஜெயராஜ்சன், தர்சிபா லவகீசன் ஆகியோரின் பெயர்கள் தேர்தல் ஆணையாளருக்கு பரிந்துரைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரின் பெயர்களும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் அடுத்த அமர்வில் இரு உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்து உறுப்பினர்களாக பதவி ஏற்றுக் கொள்வார்கள். (3)

## முடிவுக்கு வந்தது...

ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சத்தியாக்கிரக போராட்டம் தொடர்ச்சியாக நான்காவது நாளாக கல்முனை ஐக்கிய சதுக்கத்தில் நடைபெற்ற நிலையில் நேற்று நிறைவடைந்துள்ளது.

தமிழர்களின் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதனால் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தை நிறைவு செய்வதாகவும் இணக்கமான தீர்வு எட்டப்படும் வரை தாம் விழிப்புடன் இருப்போம் என்றும் போராட்டக்காரர்கள் ஊடகங்களிடம் தெரிவித்தனர். (3)

## சிறுபான்மை...

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

நாட்டின் தலைவர்கள் அனைவரும் இந்த நாட்டில் ஒருமித்த பயணத்துடன் செல்ல வேண்டும். இல்லையென்றால் நாடு பிளவுகளை சந்திக்க நேரிடும்.

நாட்டில் வாழ்கின்ற மக்கள் அவர்களின் ஆடை விடயங்களை கைக்கொள்கின்ற தன்மை பாதுகாக்கப்படல் வேண்டும்.

மறாக மறுக்கப்படக் கூடாது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதோடு ஒருமித்த கோணத்தோடு பார்க்கப்படல் வேண்டும். இலங்கை நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் போக்குகள் குறைந்தபாடில்லை இது களையப்படல் வேண்டும்.

முன்னாள் தலைவர்களான டி.எஸ். சேனாநாயக்க மற்றும் முஸ்லிம் தலைவர்களான டி.பி.ஜாயா மற்றும் இன்னோரன்ன தலைவர்களின் செயற்பாடுகளை கைக்கொள்ள வேண்டும். ஒருமித்த நாட்டுக்குக்குள் குரோதங்களை வளர்க்க கூடாது என தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான சுசந்த புஞ்சிநிலமே, எம்.எஸ்.தௌபீக் உள்ளிட்ட மாவட்ட ஊடகவியலாளர்கள் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (3)

## திடீரென மயக்க...

கொண்டு செல்லப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மீண்டும் 21ஆம் திகதி சிறுமி மயக்கமடைந்துள்ளார் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார். நேற்று முன்தினம் மீண்டும் மயக்கமடைந்த சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமிக்கு வலிப்பு ஏற்பட்டு இரைப்பையில் உள்ள பதார்த்தம் சுவாசக்குழாய்க்குள் சென்றதால் மரணம் நிகழ்ந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (3,9)

## இணைந்தே...

முதலில் தலதா மாளிகைக்கு சென்ற மகிந்த ராஜபக்ஷ, வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன் பின்னர் மல்வத்து விகாரைக்கு சென்று மல்வத்து மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். இதனையடுத்து மல்வத்து அநுநாயக்கர் நியங்கொட விஜிதசிறி தேரர், திம்புல்கும்புரே ஸ்ரீ விமலதம்ம தேரரை சந்தித்து ஆசி பெற்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அநுநாயக்க தேரர், 30 வருட கால யுத்தம் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அபிவிருத்திப் பணிகளை சரியான முறையில் மேற்கொண்டார். மக்களும் மகிந்த ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்துள்ளனர். இதனால், புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதனையடுத்து அஸ்கிரிய விகாரைக்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவர், அஸ்கிரிய மாநாயக்கர் வரக்காகொட ஞானரத்ன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். (3)

## 60 லீற்றர் கசிப்பு...

நிலையம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது 600 லீற்றர் கோடாவும் 60 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் 13 வயது சிறுவன் ஒருவனும் சம்பவ இடத்திலிருந்து கைது செய்யப்பட்டுள்ளான்.

கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்கள் மற்றும் கைது செய்யப்பட்ட சிறுவன் ஆகியோரை இன்றைய தினம் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளதாக தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (3,316)

## சாட்சியம் வழங்...

மன்ற விசேட தெரிவுக்குழுவில் சாட்சியம் வழங்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

தன்னை தெரிவுக்குழுவுக்கு அழைப்பதற்கு முன்னர் சாட்சி வழங்குவதற்கு தயாராக இருப்பதாக பிரதமர் தெரிவுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழுவில் சாட்சி பெறுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரையும் அழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, அமைச்சர்களான சாகல ரத்நாயக்க, ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரையும் அழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

விசேட தெரிவுக்குழுவின் அடுத்த அமர்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## தெரிவுக்குழு...

அவர்களையும் சாட்சியம் வழங்குவதற்கு தெரிவுக்குழு அழைப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாம் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கப்போவதில்லை எனத் தெரிவித்தமை பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (3)

## தமிழர்...

வசிய தலையீடுகள் செய்யவேண்டாம் என முஸ்லிம் தலைமைகளுக்கு காத்திரமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியதாக அதன் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் முஸ்லிம் தலைமைகள் அநாவசியமாக தலையிட்டு குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாகவே நாம் கருதுகின்றோம். கல்முனை வடக்கு நிலத்தொடர்பு கொண்ட பிரதேசம். அதுமட்டும் அல்ல இது தமிழர்கள் வாழும் பகுதி. இதில் புதிதாக எல்லை நிர்ணயம் ஒன்றினை செய்யவேண்டிய எந்தவித தேவையும் இல்லை. கல்முனை தெற்கு பிரதேச செயலகம் நிலத்தொடர்பு இல்லாதது. இதில் தான் எல்லை நிர்ணயங்கள் செய்தாக வேண்டும். இது அவர்களின் பிரச்சினை. இதனை தீர்க்க தெரிவுக்குழு அமைத்துக்கொள்வதும் நடவடிக்கை எடுப்பதும் அவர்களின் பிரச்சினை ஆனால் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் அநாவசியமாக முஸ்லிம் பிரதிநிதிகள் தலையிட்டு தமிழர்களின் பிரச்சினைகளை குழப்புவது கண்டிக்கத்தக்கது எனத் தெரிவித்தார். (3)


கொவிசெத
திகதி 2019.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 2157
C 04 37 59 73

நீரோகா
திகதி 23/06/2019
சீட்டிழுப்பு இலக்கம் 0562
இடபம் 04 32 57 70

தன நிதானய
திகதி 2019-06-23
சீட்டிழுப்பு இலக்கம் 165
E 31 35 38 69

மஹஜன சம்பத
திகதி 2019/06/23
சீட்டிழுப்பு இலக்கம் 3944
S 9 0 9 1 4 9

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-6757)

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை.
UK - 525.00, Germany - 675.00, France - 830.00
நிபந்தனைகள் எதுவும் இல்லை

அருள் | இல.1, பெற்றோல் செற் லேன், நெல்லியடி.
076 443 1576

(C-6615)

வீடு விற்பனைக்கு

வட்டு.கிழக்கு வட்டுக்கோட்டை குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 803 7876


(C-6762)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி வீரசிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர், அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் உபதலைவர் கட்டைவேலி ப.நோ.கூ.சங்கம், முன்னாள் ஓய்வுதியர் சங்க தலைவர் முன்னாள் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்)

தோற்றம் :- 06.01.1938 மறைவு : 23.06.2019



சித்திராங்கர் வீடு, நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் அந்திரான் கரவெட்டி வடக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வீரசிங்கம் நேற்றையதினம் *(23.06.2019)* ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-இலட்சுமி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - இராசம்மாவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரி (மலர்) அவர்களின் அன்புக் கணவரும், திருக்குமார் (பொறியியலாளர்), புனிதாலக்ஸ்மி (சுவிஸ்), சபேசன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (லண்டன்), பரணீதரன் *(AIA Insurance)*, ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிற்றம்பலம், நடராஜா, பார்வதி மற்றும் பொன்னம்பலம் (உபாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யசோதை சத்தியசொரூபன், கௌரி, நிரஞ்சனா, சஜீபா ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிராம், ரிஷிகேசன், திருலோஷன், மதுவந்தி, சஜிசன், கீர்த்தனா, கிருஸ்ணா, ஜோஜிதன், சானுசா, சங்கீர்த், சேயோன், சனோசன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(24.06.2019)* திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொடிகாம வீதி,
அந்திரான் கரவெட்டி வடக்கு, (C-6759)
கரவெட்டி.

தகவல் :
0771340080, 0770797635 குடும்பத்தினர்

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இப்பொழுது!!!
- குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- மேலதிக கட்டணம் எதுவும் இல்லை.

UK - 350/=
France, Germany, Italy, Denmark } 500/=

(9192)

திருமுருகன் கொம்நெற்
திருநெல்வேலி, நெல்லியடி. 321, K.K.S.Road, Jaffna. 0777 554 528

பேக்கரி வாடகைக்கு

இயங்கிக் கொண்டிருக்கும் பேக்கரி வாடகைக்கு உண்டு

தொடர்பு : 0776228868

(9356)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(9252)

விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

DELIVERY IN 3-5 DAYS

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELs

(C-6532)

வேலைவாய்ப்பு

மகளிர் திட்டம் மிருசுவிலில் அமைந்துள்ள K.K. ஊதுபத்தித் தொழிற்சாலை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 602 3002

(9355)

உ
விராட் விஸ்வப் பிம்மனேநம

# நன்றி பாராட்டல்

ஸ்ரீகாமாட்சி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு (23.06.2019) கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.மாவை சோ.சேனாதிராஜா அவர்களால் கலைச்சூரியர் விருதினை வே.க.நவநீதன் அவர்களுக்கு வழங்கிய சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கும். அந் நிகழ்வில் எம்மை பாராட்டிய மாநகரசபை உறுப்பினருக்கும் சமாதான நீதவானுமாகிய இ.கணேசராசா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நவபவனம்
நாச்சிமார் கோவிலடி

(9358)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

softlogic
BEST IN THE BUSINESS

UPTO 60% மாபெரும் மலிவு விற்பனை

June 25, 26, 27




(C-6755)

வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 567 1108, 077 912 7954

SAMSUNG, Panasonic ideas for life, softlogic PRIZMA, Whirlpool, CANDY, NOKIA Connecting People, DELL, acer

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.